வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 31.07.2021 சனிக்கிழமை | இதழ் : 240 | பக்கங்கள் : 16






# இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானம்!

## பிரிட்டன் தலைமையில் ஐந்து நாடுகள் இணைந்து ஐ.நா. மனித உரிமை சபையில் முன்வைக்க திட்டம்

கொழும்பு, ஜூலை 31

எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 48 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு கடுமையான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவருகின்றது. 15

## 2,455 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

*கொழும்பு, ஜூலை 31*

நாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை கோவிட்-19 நோய்த்தொற்றால் 2 ஆயிரத்து 455 பேர் பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். 15

## நாட்டில் கொரோனாவால் மேலும் 56 பேர் மரணம்!

*கொழும்பு, ஜூலை 31*

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 56 பேர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதனால் இலங்கையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4380 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசனில் பொலிஸார் ஒன்பது பேருக்கு தொற்று

*யாழ்ப்பாணம், ஜூலை 31*

காங்கேசன்துறையில் உள்ள வடமாகாண பொலிஸ் தலைமை அலுவலகத்தில் 9 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் 15

## வேலணையில் 13 பேருக்கு கொரோனா!

*யாழ்ப்பாணம், ஜூலை 31*

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரு வயதுடைய பெண் குழந்தைகள் இருவர் உட்பட 13 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் மேற் 15

## அரசாங்க நிறுவனங்கள், பொது இடங்களுக்கு செல்வோருக்கு தடுப்பூசி அட்டை கட்டாயம்!

### எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தத் தீர்மானம்

*கொழும்பு, ஜூலை 31*

எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு செல்லும் மக்கள், தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் அட்டையைத் தம்வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது குறித்தும் ஜனாதிபதி தலைமையிலான கோவிட்-19 குழு கவனம் செலுத்தியுள்ளது.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கோவிட்-19 ஒழிப்பு சிறப்புக் குழுவுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று பிற்பகல் 15



## சகல அரச ஊழியர்களும் ஓகஸ்ட் 2 முதல் கடமைக்கு

### ஜனாதிபதியின் செயலர் அறிவுறுத்தல்

*கொழும்பு, ஜூலை 31*

"கோவிட்-19 நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களை கடமைக்கு அழைப்பதற்கும் வீட்டிலிருந்து கடமையாற்றுவதற்கும் அனுமதியளித்து வழங்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளையும் இரத்து செய்து அனைத்து ஊழியர்களையும் வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை கடமைக்கு 15

## சிறுமியின் மரணம் தொடர்பான உண்மைகளை மறைக்கக்கூடாது

### சோபித தேரர் கோரிக்கை

*கொழும்பு, ஜூலை 31*

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் மரணம் தொடர்பான உண்மைகளை மறைக்க அனுமதிக்கக் கூடாது என சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சோபித தேரர் மேலும் கூறியுள்ளதாவது:

இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் உடனடியாக பாராளுமன்றில் இருந்தும் வெளியேற்றப்படவேண்டும்.

மேலும் இதேபோன்ற சம்பவங்கள் தொடர்பாக தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு ஆணைக் குழு, பொலிஸார் மற்றும் அதிகாரிகள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்கள், கொலைகாரர்கள் மற்றும் திருடர்கள் போன்ற குற்றவாளிகள் பாராளுமன்றத்தை தங்கள் அதிகார இடமாக மாற்றியுள்ளனர். 15

## யாழ்.பல்கலை இந்து கற்கை பீடாதிபதிக்கு கொரோனா!

*யாழ்ப்பாணம், ஜூலை 31*

யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீடத்தின் பீடாதிபதிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 15

## தடுப்பூசி பெறாவர்கள் குறித்து கணக்கெடுப்பை நடத்துங்கள்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு

*கொழும்பு, ஜூலை 31*

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில், தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்த கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கோவிட் நோயாளர்கள் மற்றும் மரணமடைந் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் எச்சரிக்கை விடுத்தார். யாழ்ப்பாணத்தில் விரைவில் முருகன் கொத்தணி, பிள்ளையார் கொத்தணி, சிவபெருமான் கொத்தணி என்று கொரோனா கொத்தணிகள் உருவாகப்போகின்றன போலிருக்கிறது என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் விளக்கமாகச் சொன்னார்.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எச்சரிக்கை விடுத்திருந்தாரே கவனிக்கவில்லையா என்றார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் சுகாதார நடைமுறை சரியாகப் பின்பற்றப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த நிலைமை அபாய நிலைக்கு இட்டுச் செல்லும் எனவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எச்சரிக்கை விடுத்திருந்ததைத்தான் அவர் கூறுகிறார் என்பது அப்போதுதான் புரிந்தது.

கத்தோலிக்க தேவாலயங்களில் எப்படி ஆலயத்திற்குள் நுழையவேண்டும், எப்படி ஆலயத்தில் இருக்கவேண்டும், திருவிருந்தை (இந்து ஆலயங்களில் பிரசாதம் வழங்குவது போல கத்தோலிக்க ஆலயங்களில் திருவிருந்து வழங்கப்படுவதுண்டு) எப்படி ஒழுங்குமுறையாக பெறவேண்டும் என்பது ஒவ்வொரு கத்தோலிக்கர்களும் சிறுவர்களாக இருக்கும்போதே பாடம் நடத்தி அவர்களை தயார் செய்து விடுவார்கள்.

அதனால் கத்தோலிக்க தேவாலயங்களில் வழிபாடுகளின்போதும் ஓர் ஒழுங்குமுறை இருக்கும்.

ஆனால், இந்து ஆலயங்களில் அப்படி எதுவும் இருப்பதில்லை. சுவாமி வீதியுலாவரும்போது சுவாமியைத் தூக்குவதற்கு ஒருவரையொருவர் முட்டிமோதுவார்கள். தேர் வடம்பிடிக்க முட்டிமோதுவார்கள்.

இந்துக்களுக்காக கிராமத்துக்கு ஒரு சங்கம் இருக்கும். இப்போது போதாக்குறைக்கு இந்துக்களின் அதுதான் சைவர்களின் அரசியல் நலனைக் கவனிக்கக்கூட அமைப்புக்கள் வந்துவிட்டன.

அவர்களின் நோக்கம் எல்லாம் யாரை வாழ்த்துவது, யாருக்கு பொன்னாடை போர்த்துவது, எந்த விடயத்திற்கு அறிக்கை விடுவது என்பதில் மாத்திரமே இருக்கின்றது.

இன்று ஆலயங்களில் சுகாதார நடைமுறைகளை ஒழுங்காக பின்பற்ற முடியாவிட்டால் சுகாதார துறையினர் ஆலயங்களையே தனிமைப்படுத்த தொடங்கிவிடுவார்கள்.

நல்லூரில் ஓர் ஆலயத்தில் ஆலய அறங்காவலர்களையே கைது செய்யுமளவிறந்கு நிலைமை போனது.

நூற்றி ஐம்பது பக்தர்களுடன் மட்டுமே ஆலயங்களில் உற்சவங்களை நடத்த அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால், அதனை எப்படி நிர்வகிப்பது என்பதில் ஆலய நிர்வாகங்கள் தடுமாறிக்கொண்டிருக்கின்றன.

வடமராட்சியில் ஓர் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்டவர்களில் நாற்பதுக்கும் அதிகமானவர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்ட செய்தி வெளியாகியிருந்தது.

நாட்டின் அனைத்துப் பகுதியிலும், சுமார் இருபது வீதமானவர்கள் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்று அரச தாதியர் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அப்படியெனில் எனக்கும் தொற்று இருக்கலாம். ஆனால், எனது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி எனக்கு உயிராபத்து ஏற்படுகின்ற அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்கலாம்.

ஆனால், நான் இன்னுமொருவருக்கு அந்தத் தொற்றைக் கொடுப்பேன். அதனால் அவருக்கு உயிராபத்துக்கூட ஏற்படலாம். அப்படியெனில் ஒரு கொலையைச் செய்வதற்கு ஒப்பான பாவத்தைச் சுமக்கப்போகிறேன் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டாமா?

இந்து ஆலயங்களில் உற்சவங்களை நடத்துகின்றபோது எவ்வாறு சுகாதார நடைமுறைகளை பின்பற்றலாம் என்பதை தெளிவுபடுத்தி நமது ஆலயங்களில் உற்சவங்கள் நடப்பதை இங்குள்ள இந்து மன்றங்களும், மதத்தின் பெயரால் இயங்கும் அனைத்துத் தரப்பினரும் தமது முதற்கடமையாகக் கொள்ளாவிட்டால், மேலே நண்பர் சொன்னதுபோல முருகன் கொத்தணி, பிள்ளையார் கொத்தணி, சிவன் கொத்தணி என்ற பெயர்களில் கொத்தணிகள் உருவாகுவதை தடுக்கமுடியாது.!

**- ஊர்க்குருவி**

# தென்பகுதியில் இருந்து வடக்குக்குள் நுழைந்த 22 பேருக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 31

தென்பகுதியில் இருந்து வடக்குக்குள் நுழைந்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 22 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதியில் இரவு வேளைகளில் வடக்குக்கு வருபவர்களை வவுனியா ஏ-9 வீதி நுழைவாயிலான மூன்றுமுறிப்பு பகுதியில் வழிமறித்த சுகாதாரப் பிரிவினர் கடந்த திங்கள்கிழமை நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 5.30 வரை 300 இற்கு மேற்பட்டவர்களிடம் பி.சீ.ஆர் பரிசோதனை முன்னெடுத்திருந்தனர்.

அதன் முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையில் 22 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தேக்கவத்தைப் பகுதியில் ஒருவருக்கும், புளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், அரியாலை பகுதியில் இருவருக்கும், களுத்துறை பகுதியைச் சேர்ந்த ஒவருக்கும், யாழ் வேலணை 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், கொக்குவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கும், கிளிநொச்சி பளையைச் சேர்ந்த ஒருவருக்கும், முல்லைத்தீவு வவுனிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்கும், கந்தளாய் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், மிகிந்தலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், வவுனியா நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த இருவருக்கும், செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், வவுனியா சூசைப்பிள்ளையார் குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் என 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்மூலம், தென்பகுதியில் இருந்து வடக்கிற்கு பிரவேசிப்பவர்கள் ஊடாக கோவிட் பரவல் அடைந்து பவருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 80 கிலோகிராம் நீலநிற இரத்தினக்கல் சீனாவுக்கு பறக்கும்

கொழும்பு, ஜூலை 31

இரத்தினபுரி - இறக்குவானைப் பகுதியிலிருந்து 80 கிலோகிராம் நிறையுடன் நீல நிறத்திலான இரத்தினக்கல் ஒன்று கிடைத்துள்ளது.

அந்த இரத்தினக்கல், எதிர்வரும் நவம்பர் மாதம் சீனாவில் நடைபெறவுள்ள ஏல விற்பனைக்கு கொண்டுச் செல்லப்படவுள்ளது. அந்த இரத்தினக் கல்லை அதன் உரிமையாளர், சிய இரத் தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையிடம் ஒப்படைத் துள்ளார்.

80 கிலோகிராம் நிறையைக் கொண்ட நீல நிற இரத்தினக் கல் 50 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானது என உரிமையாளர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இரத்தினபுரி கஹவத்தை பகுதியில் 510 கிலோகிராம் நிறையுடைய சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியாக நீல நிற இரத்தினக்கல் அண்மையில் கண்டெடுக்கப்பட்டது. அந்தக் கல்லின் பெறுமதி 2000 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டது. எனினும், இரண்டொரு நாள்களின் பின்னர், அந்தக் கல் மதிப்பற்றது என தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்வி TV CHANNEL-1 — 31.07.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி TV CHANNEL - 2 — 31.07.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
31.07.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இதற்கு முடிவு எப்போது?

இறுதி யுத்தத்தின் போதும், அதன் பின்னரும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? இந்தக் கேள்வியுடன் பன்னிரெண்டு வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், ஆட்சியாளர்களோ தொடர்ந்தும் அவற்றை கண்டுகொள்ளாமலேயே இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு இதுவரையில் உரிய பதில் கிடைக்கவில்லை. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் அவர்கள் உயிரோடு இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசுகின்றோது குறிப்பிட்டிருந்தார். ரணில் அவ்வாறு கூறிய போதிலும் அரசாங்கம் அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. காணாமலாக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லையென்றால் அதனை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். ஆனால், ஆட்சியாளர்கள் அவ்வாறு செய்வதை தொடர்ந்தும் தவிர்த்து வருகின்றனர்.

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் சர்வதேச அழுத்தங்கள் தொடர்கின்றன என்று கூறப்பட்டாலும் கூட, அந்த அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரையில் நன்மை கிடைக்கவில்லை. ஆனால், இப்போதும் பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேசத்தை நோக்கியே தங்களின் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். சர்வதேசத்தின் மீதான நம்பிக்கையை அவர்கள் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

2012இல் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா பிரேரணை ஒன்றை முன்வைத்தது. அப்போதிருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அமெரிக்க பிரேரணையை ஏற்றுக்கொள்ள மறுத்தது. இதனைத் தொடர்ந்து இலங்கையின்மீது மேலும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. 2015இல் ஆட்சியை கைப்பற்றிய புதிய அரசாங்கம் அமெரிக்க பிரேரணைக்கு இணையனுசரணை வழங்கி அதனை ஏற்றுக்கொண்டது. இதன் மூலம் இறுதி யுத்தத்தின் போது சில தவறுகள் இடம்பெற்றிருக்கின்றன என்பதை இலங்கையின் அரசாங்கம் முதன்முதலாக ஏற்றுக்கொண்டது. சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்தவாறு, சில விடயங்களை அரசாங்கம் மேற்கொள்ள முயற்சித்தது. ஆனாலும் ரணில் – மைத்திரி அரசாங்கத்திற்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகளின் காரணமாக ஒரு கட்டத்திற்கு மேல் எந்தவொரு விடயங்களும் முன்நோக்கி நகரவில்லை.

2019இல், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமையை தொடர்ந்து நிலைமைகள் மீளவும் பழைய நிலைக்கு திரும்பின. ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின்போதே, தான் வெற்றிபெற்றால் முன்னைய அரசாங்கம் முன்னெடுத்த அனைத்து விடயங்களையும் கைவிடுவதாகவும் சர்வதேச அழுத்தங்கள் எதற்கும் தான் அடிபணியப் போவதில்லை என்றும் கோட்டாபய தெரிவித்திருந்தார்.

ராஜபக்ஷக்கள் மீளவும் அதிகாரத்தை பெற்றதை தொடர்ந்து, நீதி தொடர்பில் ஓரளவு எஞ்சிக்கிடந்த நம்பிக்கையும்கூட கேள்விக்குள்ளானது. இந்த நிலையில்தான் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மீளவும் வீதிக்கு வந்திருக்கின்றனர். இதற்கு எப்போது முடிவு? இலங்கைத் தீவை பொறுத்தவரையில் இதற்கான பதிலை ஆட்சியாளர்கள்தான் கூற வேண்டும் ஆனால், அவர்கள் சொல்லப் போவதில்லை!

# சீனாவை இலக்கு வைக்க ஜெனிவா பிரேரணைகள் மீது கவனம் செலுத்தும் அமெரிக்கா!

- அலசுவது இராஜதந்திரி -

அமெரிக்க தூதுவர் அலைனா டெப் லிட்ஸ் இலங்கையில் சீனாவினால் உருவாக்கப்பட்டுவரும் கொழும்பு துறைமுக அபிவிருத்தி நகர் பற்றியும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் தொடர்பாகவும் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஒருபுறம் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது. மறுபுறத்தே எதிர்வரும் செப்ரெம்பரில் ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கை எவ்வளவு தூரம் யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட மனித உரிமைகளை மேம்படுத்தும் பிரேரணைகளை அமுலாக்குவதில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது என்பது பற்றியும் ஆராயப்படவுள்ளது.

**அமெரிக்க கரிசனை**

இத்தகைய பின்னணியிலேயே அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் கொழும்பு துறைமுக நகர் பற்றியும் எதிர்வரும் செப்ரெம்பரில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் பற்றியும் தெரிவித்துள்ளார்.

இந்த இரு விடயங்களிலும் அமெரிக்காவுக்கு எந்த விடயம் அதிமுக்கியமானதென்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

அமெரிக்காவையும் அதன் நேச நாடான இந்தியாவையும் பொறுத்தவரை சீனாவின் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் “வயிற்றில் புளியைக் கரைக்கும்” ஒரு நடவடிக்கையாகவே விளங்குகின்றது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மையமாக கொண்டதாகவே கொழும்பு துறைமுக அபிவிருத்தித்திட்டம் இருப்பதாக இலங்கை தெரிவித்து வருகின்றது.

ஆனால், இலங்கையை தனது பிடிக்குள் வைத்து தனது பிராந்திய வல்லாதிக்கத்தை வலுப்படுத்தும் சீனாவின் ஒரு மறைமுக நடவடிக்கையே கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் என்று அமெரிக்காவும், இந்தியாவும் கருதுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே அமெரிக்க தூதுவர் வெளிப்படுத்திய கருத்துக்களும் காணப்படுகின்றன.

இலங்கையில் மனித உரிமைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று முதலில் ஜெனிவாவில் அமெரிக்காவே குரல் கொடுத்திருந்தது. ஆனால், அதன்பின்னர் கடந்த சில வருடங்களில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான பிரேரணைகள் குறித்து ஆராய்வதும், அப்பிரேரணைகளை அமுல்படுத்துவதன் அவசியம் பற்றியும் குறிப்பிடப்பட்டு வருகின்றதே தவிர, எவ்வித அழுத்தமும் இலங்கை மீது அமெரிக்காவினாலோ அல்லது அதனோடிணைந்த ஏனைய நாடுகளினாலோ உரிய வகையில் கொடுக்கப்படவில்லை.

ஆனால், தற்சமயம் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் கூறியுள்ளமையைப் பார்க்கும் போது சீனாவின் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி தொடர்பாக தனது நலன்களை முதன்மைப் படுத்தியே அமெரிக்கா இலங்கையில் அடிப்படை மனித உரிமைகளில் காணப்படு கின்ற தேக்க நிலை பற்றி குறிப்பிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**சீனாவின் கட்டுப்பாட்டில் கொழும்பு துறைமுக நகரம்**

சீனாவினால் உருவாக்கப்பட்டுவரும் துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் பற்றி குறிப்பிடுகையில் அமெரிக்க நிறுவனங்கள் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டப் போவதில்லை என்று அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.


ஆனால் இலங்கையே, வெளிநாட்டு அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கும் விதத்தில் கொழும்பு துறைமுக நகரில் சீனா தவிர்ந்த ஏனைய நாடுகளும் முதலீடு செய்யலாமென குறிப்பிட்டு வருகின்றதே தவிர, கொழும்பு துறைமுக நகரின் கட்டுமானங்களைப் பார்க்கும்போது சீனா முழுமையாக தனது கட்டுப்பாட்டில் கொழும்பு துறைமுக நகரின் கட்டுப்பாட்டை வைத்திருக்குமென்றே கருத முடிகின்றது.

அமெரிக்கத்ஸதூதுவர் அலைனா டெப்லிட்ஸ் சீனாவின் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தின் நம்பகத் தன்மை குறித்தும் தமது கரிசனையை வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம் அமெரிக்கா தனது பிராந்திய வல்லாதிக்கத்துக்கு சீனா ஓர் அச்சுறுத்தலாக இருக்கக்கூடாதென மறைமுகமாக தெரிவித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இது விடயத்தில் இலங்கை மீதான மனித உரிமைகள் பேரவை பிரேரணைகள் பற்றியும் அமெரிக்கா குறிப்பிடுவதை நோக்கும்போது சீனா மீதான தனது மாறுபாடான தன்மைகளுக்கு இலங்கை மீதான ஜெனிவா பிரேரணைகளை பயன்படுத்த அமெரிக்கா முனைகின்றதே தவிர, எவ்விதத்திலும் நேர்மையான முறையில் இலங்கையின் வடக்கு - கிழக்கின் மனிதாபிமான பிரச்னைகளை கையாள அமெரிக்கா எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பதே தெளிவாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பணத்தேவை கடைசி நேரத்தில் நிறைவேறும். சுப செய்தி வரும். பணவரவு ஓரளவே இருக்கும். பிரச்னை தீரும். உறவினர் உதவுவர். குடும்பத்தினரின் ஆதரவு உண்டு.

**இடபம்**
மன நிறைவு காண்பீர்கள். எடுத்த வேலைகள் எளிதில் முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களிடம் எதிர்பார்த்த உதவி ஓரளவே கிடைக்கும். கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். எதிர்பார்த்த பணம் வரும்.

**மிதுனம்**
விரயம் கூடும். முன்யோசனையுடன் பேசுவது நன்மையளிக்கும். எதிரிகள் பலமிழப்பர். செல்வ வளமும் நன்மையும் கூடுதலாகும். நண்பர்களால் எதிர்பார்த்த நன்மைகள் நடைபெறும்.

**கடகம்**
சந்தோஷமான நாள். ஆனால் அதிக அலைச்சல் உண்டு. உடல்நலனில் அதிருப்தி ஏற்பட்டு மறையும். வீண் பயம் தீரும். உறவினர் ஒருவர் பற்றிய கவலை அளிக்கும் செய்தி வரலாம்.

**சிம்மம்**
தேக ஆரோக்கியம் தெளிவு பெறும். வியாபார அபிவிருத்தி உண்டு. சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். சிறு பிரச்னை ஒன்று ஏற்படலாம். குடும்பத்தில் வெளியாட்களால் பிரச்னை ஏற்படலாம்.

**கன்னி**
மறதியால் சிறு சிறு பிரச்னைகளுக்கு ஆளாக நேரிடும். மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயல்படுவது நல்லது. நினைத்ததை முடித்து நிம்மதி காண்பீர்கள். செல்வ வளம் கூடும்.

**துலாம்**
பூமிவகையில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். கவலை நீங்கும். பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்பு மெல்லக் குறையும். சேமிப்பை உயர்த்தும் எண்ணம் கூடும். நன்மை உண்டாகும்.

**விருட்சிகம்**
வருங்கால நலனுக்காகச் செய்த செயல் பலன் அளிக்கும். புதிய வீடு, நிலம் வாங்கி மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைவீர்கள். புதிய நண்பர்களால் நன்மையும் மகிழ்ச்சியும் கிடைக்கும் நாள்.

**தனுசு**
குழந்தைகளின் எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பயணங்களால் நன்மை ஏற்படும். மனதில் அமைதி தவழும். நிதிநிலை கூடும். பொழுதுபோக்கு அம்சங்களில் ஆர்வம் கூடும்.

**மகரம்**
நெருங்கியவருடன் ஏற்பட்ட பகையைத் தீர்க்க முயல்வது நல்லது. நண்பர்களின் ஆலோசனைகளை ஏற்று முன்னேறுவீர்கள். புதிய திட்டங்கள் சற்றுத் தாமதமானாலும் சிறப்பாக நிறைவேறும்.

**கும்பம்**
முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பீர்கள். வீண்பயம் நீங்கும். குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்படும். மன நிறைவு கிடைக்கும். உற்ற நண்பர்களிடம் அதிக உதவியை எதிர்பார்க்க இயலாது.

**மீனம்**
வெளியில் சொல்ல முடியாமல் இருந்த பிரச்னைகள் தீரும். விரயம் குறையும். பணியிடத்தில் நன்மை காண்பீர்கள். குதூகலமான நாள். புதிய பொறுப்பை ஏற்று முன்னேறுவீர்கள்.

# இலங்கை தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க இயலாது!

## நீதிமன்றத்தில் மத்திய அரசு வாதம்

மதுரை, ஜூலை 31,

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு வந்த தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க இயலாது என இந்திய மத்திய அரசு தெரிவித்து உள்ளது.

தமிழகத்திற்கு அகதிகளாக வந்த இலங்கை தமிழர்கள் தங்களுக்கு இந்திய குடியுரிமை வேண்டும் என்றும், நீண்ட நாட்களாக தமிழகத்தில் நாங்கள் குடியிருக்கின்றோம் என்றும், எங்களது பூர்வீகம் தமிழ்நாடு தான், எங்களது முன்னோர்கள் வணிகரீதியாக இலங்கைக்கு சென்றார்கள் என்றும், தற்போது அங்கு உள்ள அரசியல் சூழலின் காரணமாக மீண்டும் அகதிகளாக நாங்கள் தமிழகம் திரும்பி விட்டோம் என்றும், எனவே எங்களுக்கு குடியுரிமை வழங்க உத்தர விட வேண்டும் என்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை கடந்த 2019ம் ஆண்டு நீதிபதி சுவாமிநாதன் விசாரணை செய்து இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதில் உங்களுக்கு என்ன பிரச்சனை இருக்கின்றது? அவர்களது மனுவை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



இதனையடுத்து, இந்த உத்தரவை எதிர்த்து தற்போது உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தலைமை நீதிபதி அமர்வு முன் மத்திய அரசு மேல் முறையீடு செய்திருந்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன் விசாரணையில், இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த அகதிகள் சட்டவிரோதமாக குடியேறியவர்கள். எனவே அவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க முடியாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# ‘ரோபோட்’ மூலமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம்

## மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை, ஜூலை 31

தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக ‘ரோபோட்’ மூலம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையத்தை, டாக்டர் ரேலா மருத்துவமனையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

முன்னாள் மத்திய மந்திரியும், அரக்கோணம் தொகுதி தி.மு.க. எம்.பி.யுமான எஸ். ஜெகத்ரட்சகன் தொடங்கிய டாக்டர் ரேலா மருத்துவமனையில் தமிழகத்திலேயே முதன் முறையாக ‘ரோபோட்’ மூலம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை நடந்தது. விழாவுக்கு தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

விழாவில் ‘ரிமோட்’ மூலம் ‘ரோபோட்’ கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:

“உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனையாக டாக்டர் ரேலா மருத்துவமனை பெயர் பெற்றிருப்பது பெருமையாக இருக்கிறது. டாக்டர் முகமது ரேலா தனது மருத்துவ திறமையால் மக்களை அவர் வாழ வைத்துக் கொண்டிருப்பது தமிழகத்துக்கு கிடைத்த பெருமை. 4,500இற்கும் மேற்பட்ட கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து இருக்கிறார். பிறந்து 5 நாளே ஆன குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்து கின்னசில் பெயர் பெற்றார்” எனத் தெரிவித்தார்.

இந்த ரோபோட் மூலம் அறுவை சிகிச்சை செய்யும் முறை இந்தியாவில் கொச்சியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் ஏற்கனவே நடந்திருக்கிறது. தமிழகத்தை பொறுத்தவரை இதுதான் முதல்முறையாகும். இந்தியாவிலேயே ‘ரோபோட்’ மூலம் குழந்தைகளுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை முறை ரேலா மருத்துவமனையில் தான் முதன் முதலில் தொடங்கப்பட்டுள்ளது

# தடுமாறும் எடப்பாடியும், பன்னீரும் சசிகலா அ.தி.மு.கவை கைப்பற்றுவார்

## தங்க தமிழ்செல்வன் திட்டவட்டமாக கூறுகிறார்

சென்னை, ஜூலை 31,

சசிகலா விரைவில் அ.தி.மு.க.வை கைப்பற்றுவார் என்று தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் தங்கதமிழ் செல்வன் கூறினார்.

தேனி மாவட்டம் போடியில் புதிதாக கட்டப்பட்டு வரும் மீன் மார்க்கெட் மற்றும் அம்மா உணவகம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் திட்ட பணிகளை தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் தங்கதமிழ்செல்வன் ஆய்வு செய்தார். அதன்பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

”அ.தி.மு.க.வை வழிநடத்த தெரியாமல் ஓ.பன்னீர்செல்வமும், எடப்பாடி பழனிசாமியும் தத்தளித்து வருகின்றனர். இவர்கள் தங்களது சண்டை சச்சரவுகளை தீர்த்து கொள்ளத்தான் டில்லி சென்று பிரதமர் மோடியை சந்தித்து உள்ளனர்.

ஓ.பன்னீர்செல்வம் கடந்த 10 ஆண்டு காலமாக போடி தொகுதிக்கு செய்யாத திட்டங்களை தற்போது பொதுமக்கள் என்னிடம் கோரிக்கையாக வைக்கின்றனர். இதனால் நான் நேரில் சென்று அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறேன். நான் அதிகார துஷ்பிரயோகம் செய்வதாக ஓ.



பன்னீர்செல்வம் கூறுவதற்கு தகுதி இல்லை.

இன்றைக்கு சசிகலா, தனிப்பட்ட குடும்பம் அ.தி.மு.க.வை கைப்பற்ற முடியாது என்று ஓ. பன்னீர்செல்வம் கூறி வருகிறார். ஆனால் விரைவில் சசிகலா அ.தி.மு.க.வை கைப்பற்றுவார்” என அவர் கூறினார்.




# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் யாழ். அலுவலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை ஐ.நா. பெற்றுத்தரவேண்டும் எனவும், நீண்ட காலமாக தமது உறவுகளைத் தேடிய வண்ணம் வீதிகளிலும் மழை,வெயில்களிலும் போராடி வருவதாகவும், எனினும் தற்போது உள்ள கொரோனா நிலை காரணமாக தாம் போராட்டத்தில் ஈடுபடமுடியாத நிலை காணப்படுவதாகவும்,

தமது பிள்ளைகள் கிடைக்கும் வரை போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் கூறினர்.

யாழ்.மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி பூங்கோதை தலைமையில் இடம்பெற்ற போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

# மாணவர்களுக்கு தடுப்பூசி; கவனம் செலுத்தும் அரசு

கொழும்பு, ஜூலை 31

12 வயது முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றுவது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக கொவிட் தடுப்பூசி தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான முதல் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது. 'பைஸர்', அல்லது 'மொடர்னா' தடுப்பூசியை இந்த வயதுப் பிரிவு மாணவர்களுக்குச் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பரிந்துரை கிடைத்த பின் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவளை, 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் எதிர்வரும் செப்ரெம்பர்



மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தடுப்பூசியேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபாரிசு கிடைத்தவுடன் 18 வயதிலிருந்து 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசியேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகவும் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் நான்கு பகுதிகள் சிவப்பு வலயங்களாக அறிவிப்பு!

மட்டக்களப்பு, ஜூலை 31

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய பகுதிகள் தொடர்ந்து சிவப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இதுவரை 2இலட்சத்து 78ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்ற நிலையில் 02இலட்சத்து 58ஆறாயிரம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாகவும் இதன்போது அவர் தெரிவித் தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 58கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 8, 525பேர் கொரனாவினால் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# கொரோனா வலயமாக மாறிவரும் தம்புள்ளை

## சுகாதார பிரிவினர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 31

**தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மற்றும் தம்புள்ளை நகர் உள்ளிட்ட பகுதிகளில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தம்புள்ளை மாநகர சபையின் பிரதான பொது சுகாதாரப் பரிசோதகர் பிரியந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.**

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனைகளிலும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனைகளிலும் பெரும்பாலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 14 நாட்களில் மாத்திரம் 50இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வளாகம் மற்றும் தம்புள்ளை நகர் பகுதிகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தம்புள்ளை பிரதேச சபையின் உபதலைவர், அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளதாகவும் தம்புள்ளை பொது சுகாதார பரிசோதகர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில், இவ்வாறு நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை கண்டறியும் நடவடிக்கைகளில் சுகாதார தரப்பினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் தம்புள்ளை மாநகர சபையின் பிரதான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரியந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

# வைத்தியசாலையிலிருந்து தப்பியோடிய கொரோனா நோயாளி மடக்கிப்பிடிப்பு!

கொழும்பு, ஜூலை 31

பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 40 வயது நபர் நேற்றுமுன் தினம் காலை வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றார். எனினும், அவர் பின்னர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

வைத்தியசாலையிலிருந்து கொரோனா நோயாளி தப்பிய தகவலறிந்து, சுகாதார பரிசோதகர்கள் அவரை நகரத்துக்குள் அடையாளம் கண்டனர். சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலை மீறி, பாணந்துறை - மருதானை ரயிலில் ஏறி அவர் தப்பிக்க முயன்றார்.

பின்னர், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார், ரயிலில் இருந்து அவரை கட்டாயமாக இறக்கினர்.

அவர் மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ரயில் கிருமி நீக்கப்பட்டதால் அரை மணித்தியாலம் தாமதமாக பயணித்தது.

(அ)

# பருத்தித்துறையில் வாள்வெட்டு; பெண் ஒருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

பருத்தித்துறையில் இடம்பெற்ற வாள்வெட்டுக் குழுவொன்றின் தாக்குதலில் படுகாயமடைந்த பெண்ணொருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

திக்கம் - அல்வாய் பகுதியை சேர்ந்த வரோதயம் மேரி ஜோசப் என்ற பெண்ணே வாள் வெட்டுக் குழுவின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை, குறித்த பெண்ணின் வீட்டுக்குள் புகுந்த வாள்வெட்டு குழு, அங்கிருந்த பொருட்களை அடித்து நொறுக்கியதுடன், அவரின் மீதும் வாள் வெட்டுத்தாக்கு தலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 400 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 31

பண்டாரகம பகுதியில் 40 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளின் மொத்த பெறுமதி 400 மில்லியன் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தலில் இருந்து மேலுமொரு பகுதி விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 31

நாட்டில் மேலுமொரு பகுதி நேற்று அதிகாலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வடமராட்சி கிராம சேவகர் பிரிவே இவ்வாறு தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளது.



# மழையுடனான காலநிலை தொடர்ந்தும் நீடிக்கும்

கொழும்பு, ஜூலை 31

இலங்கையின் சில பகுதிகளில் நிலவும் மழையுடனான காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்தியமலை நாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கொரியாவில் வேலைவாய்ப்பு தருவதாகக் கூறி பணம் மோசடி

## இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 31

கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டியை சேர்ந்த இருவரிடமே இவ்வாறு வேலைவாய்ப்பு வழங்குவதாக கூறி 31 இலட்சம் ரூபா பெற்றுக் கொண்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் வதிவிடமாக பேராதனை, ஜாஎல, நீர்கொழும்பு மற்றும் முருதலாவ போன்ற பல்வேறு பகுதிகளை கூறியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். 55 மற்றும் 26 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து அவர்களை 7 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

# சீனாவிடமிருந்து சினோவாக் தடுப்பூசி பெறுவது குறித்து தீர்மானிக்கவில்லை

கொழும்பு, ஜூலை 31

சீனாவிடம் இருந்து சினோவாக் தடுப்பூசியைப் பெறுவது குறித்து எந்த முடிவும் எடுக்கப் படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை சினோவாக் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யவுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை என்று மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார். இது போன்ற எந்த முடிவும் அரசாங்கத்தால் எடுக்கப்பட வில்லை என்றும் அவர் கூறி னார்.

சினோவாக் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதா, எந்த விலையில் அல்லது எத்தனை டோஸ்களில் கொள்வனவு செய்வது என்பது குறித்து இலங்கை இதுவரை முடிவு செய்யவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அவசர தேவைக்கான தடுப்பூசியை இலங்கை அங்கீகரித்திருந்தாலும் அது கொள்வனவு செய்யப்படும் என்று அர்த்தமல்ல என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

# ஒரேநாளில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி!

## இலங்கையின் சாதனைக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு

**கொழும்பு, ஜூலை 31**

**ஒரேநாளில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்திய இலங்கையின் சாதனையை உலக சுகாதார அமைப்பு பாராட்டியுள்ளது.**

இலங்கையில் கொரோனா வைரஸுக்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 830 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த மைல் கல்லை எட்டிய சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்கத் துக்கு உலக சுகாதார அமைப்பு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது. இலங்கையில் ஒரேநாளில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

# ஊழல் குற்றச்சாட்டிலிருந்து சரண குணவர்தன விடுதலை

கொழும்பு, ஜூலை 31

ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவரை அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்கு எதிராக 8 ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துவதற்கு புதிய திட்டத்தை ஆரம்பித்தார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 31

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துவதற்கான புதிய திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் நடத்தப் படுகின்ற கருத்தரங்கு நேற்று காலியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

காலி மாவட்டத்தின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொகுதி அமைப்பாளர்கள், முகாமையாளர்களும் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கருத்தரங்கு நிறைவு பெற்ற பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு முன்னாள் ஜனாதிபதி பதிலளித்தார்.



# ஹிசாலினிக்கு நீதி கேட்டு யாழ்ப்பாணத்தில் மலையக இளைஞன் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ரிஷாத் பதியு தீன் வீட்டில் உயி ரிழந்த சிறுமி கிசா லினிக்கு நீதி கோரி யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் மலையகத் தைச்சேர்ந்த இளை ஞன் ஒருவர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டாரர்.

ரிஷாத்தின் வீட்டில் ஏற்கனவே மூன்றுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்டுள்ள ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனவே இந்த அரசாங்கமானது பெண்களை பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மாணிக்கக் கல் பற்றி கதைப்பதை நிறுத்தி விட்டு மகளீரை பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர் தெரிவித்தார்.

# விரிவுரையாளர் கண்ணதாஸன் நேற்று வவுனியா மேல்நீதிமன்றால் விடுதலை

வவுனியா, ஜூலை 31

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை விரிவுரையாளர் முன்னாள் போராளி நல்லை கண்ணதாஸ் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்காக இளைஞர் ஒருவரை கட்டாய ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் வவுனியா நீதிமன்றினால் கண்ணதாசனுக்கு ஆயுள் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

03 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்த அவரை, குற்றச்சாட்டுக்களுக்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 2020ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 22 ஆம் திகதி விடுதலை செய்திருந்தது.

இருந்தபோதிலும் அவர் மீது தொடுக்கப்பட்ட வழக்குத் தொடர்பில் மீள்விசாரணை நடத்தி வழக்கை முடிவுறுத்துமாறு வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.



இந்த நிலையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

வழக்குத் தொடுனரான சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி, குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்ய விண்ணப்பம் செய்தார்.

கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலை யானார்.

வழக்குத் தொடுநர் தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், கண்ணதாஸனை விடுவித்து விடுதலை செய்து கட்டளையிட்டார்.

# இடர்நிலை நோக்கி நாடு செல்லக்கூடும்!

## ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 31

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தால் கடந்த மே மாத்தில் ஏற்பட்ட அனர்த்த நிலையை நோக்கி நாடு செல்லக்கூடும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அலுலகங்கள் மற்றும் அங்காடி வர்த்தக நிலையங்களில் வைரஸ் தொற்று தொடர்பான விதிகளை ஒழுங்காக கடைப் பிடிப் பதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே மக்கள் பொறுப்பு டன் செயல்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

# வடக்கில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் முதலாம் கட்ட தடுப்பூசியை பெற்றுள்ளனர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

**வடக்கு மாகாணத்தில் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் முத லாம் கட்ட தடுப்பூசியினை பெற்றுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். நேற்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

வட மாகாணத்தில் தற்போது 30 வயதுக்கு மேற்பட்டோர் சைனோபாம் தடுப்பு ஊசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் நேற்று முன்தினம் வடக்கு மாகாணத்தில் 40 ஆயிரத்து 391 பேருக்கு இந்தத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6 லட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 2 லட்சத்து 31 ஆயிரத்து 111 பேருக்கு முதல் கட்டதடுப்பூசி நேற்று முன் தினம் மாலை வரை வழங்கப்பட்டுள்ளது.

அதாவது வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட 35 வீதமான 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி நேற்றுவரை வழங்கப்பட்டுள்ளது.

அநேகமாக ஓகஸ்ட் மாத நடுப் பகுதிக்கு முன்னர் வட மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கக் கூடியதாக இருக்கும். முதலாம் கட்ட தடுப்பூசியினை வழங்க முடியும்.

அதே போல செப்ரெம்பர் மாத நடுப் பகுதிக்கு முன்னர் இரண்டாவது கட்ட தடுப்பூசியையும் வடக்கு மாகாண மக்களுக்கு வழங்க முடியும்.

கடந்த இரண்டு தினங்களாக தொறறாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது இறப்புகளும் அதிகரித்து வருகின்றது.

பல மாகாணங்களில் இறப்பு அல்லது தொற்று வீதம் மிக தீவிரமாக காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்திலும் நேற்று முன் தினம் 104 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்த சூழ்நிலையில் தொற்று பரம்பலை கட்டுப்படுத்துவதற்கும் இறப்புகளை கட்டுப்படுத்துவதற்கும் மூன்று வழிகள் காணப்படுகின்றன.

- இயலுமானவரை விரைவாக தடுப்பூசிகளை கூடுதலான மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது

- இரண்டாவது பொது மக்கள் கூடுகின்ற இடங்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுதல்.

- மூன்றாவது பொதுமக்கள் ஒன்று கூடுவதை இயலுமான வரை தவிர்த்தல்.

கடந்த இரண்டு வாரங்களாக வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் அவதானித்து வருகிறோம். ஆலயங்களில் சிறிய கொத்தணிகள் கிராமப்புறங்களில் உருவாகி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அதேபோல் சில பிரதேசங்களை கூட நாங்க முடக்கி வைத்து இருக்கின்றம் என வடக்கு மாகாண பொதுமக்கள் இந்த கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் - என்றார்.

# புங்குடுதீவில் ஒரு வார காலத்தில் 15 கர்ப்பிணிகளுக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 31

புங்குடுதீவில் கடந்த ஒரு வார கால பகுதிக்குள் 15 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த அனைவருக்கும் கொரோனா சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# எதிரணிக்கு கைகொடுக்க எந்த தேவையும் இல்லை

## கூறுகின்றார் தயாசிறி



கொழும்பு, ஜூலை 31

எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்தும் எண்ணமே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை என, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எதிர்க்கட்சி என்றபோது அவர்களது ஆதரவாளர்களுக்கு ஆட்சியை பிடிப்பது தொடர்பான கனவை வழங்கவேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளதாக அவர் கூறினார்.

எனினும், எதிரணியினருக்கு அவர்களது வேலைத்திட்டம் தொடர்பில் கதைப்பதற்கு உரிமை உள்ளது என்று கூறிய அவர், எதிரணியுடன் பேச்சு நடத்த ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்றார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கைக்காக 22 மாவட்டங்களுக்கு செல்லவுள்ளதாக அவர் கூறினார்.

அதேநேரம், அரசாங்கத்தில் உள்ள அமைச்சர் என்ற ரீதியில் தற்போதைய நிலையில் மற்றுமொரு கட்சிக்கு உதவி செய்யவோ புதிய அரசாங்கத்தை அமைக்கவோ எந்த தேவையும் தமக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிழக்கு பல்கலை முன் நீதி கோரிப் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 31

மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினரால் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் காணாமல் ஆக்கபட்ட தமது உறவுகளுக்கு சர்வதேச நீதிகோரி கவனஈர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது.



மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சுமார் 30 பேர் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். “எமது உறவுகள் எங்கே?“ “எமது உறவுகளைத்தேடுவது தேச விரோதமா?“ “எனது உறவுகள் எமக்கு வேண்டும்“ போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளுடன் அவர்கள் கவனஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், நாம் போராடும் இப்பல்கலைக்கழகத்தில் வைத்து எமது பிள்ளைகளை பிடித்துச் சென்றனர். அவர்களுக்கான முடிவு இதுவரையில் இல்லை. இதே அரசாங்கம்தான் அப்போது பிடித்துச் சென்றது. அரசு எமக்கான முடிவைச் கூறுவதாக இல்லை. எமது உறவுகளைத் தேடாத இடம் இல்லை ஆகையால் சர்வதேசம் எமக்கு பதில் தரவேண்டும். ஜெனிவா எங்களுக்கு ஏதாவது ஒரு முடிவு தந்தே ஆக வேண்டும் என தெரிவித்தனர்.

# சிறுமி ஹிஷாலினியின் மரணம் சட்டங்களை திருத்தவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



கொழும்பு, ஜூலை 31

ஹிஷாலினி என்ற சிறுமியின் உயிரிழப்புச் சம்பவமானது நாடளாவிய ரீதியில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான ஆழமான கலந்துரையாடல்களைத் தோற்றுவித்திருக்கின்றது.

எனவே இப்போதேனும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான புதிய சட்டங்களை உருவாக்குவதற்கோ அல்லது சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, அதற்கு எவ்வித நிபந்தனைகளுமின்றி முழுமையான ஆதரவை வழங்குவதற்குத் தமது கட்சி தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய பெண்கள் சக்தியின் தலைவர் தலதா அத்துக்கோரள தலைமையிலான அதன் உறுப்பினர்களுடன் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# ஜனாதிபதியும் பாராட்டு!

கொழும்பு, ஜூலை 31

ஒரு நாளில் 5 இலட்சம் பேருக்கு நேற்றுமுன்தினம் தடுப்பூசிகளைப் போட்டு சாதனை படைத்தமைக்காக சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராட்டு தெரிவித்துள்ளார்.



அத்துடன், தடுப்பூசிப் பணிகளில் ஈடுபட்டுள்ள சுகாதார பணியாளர்கள் மற்றும் முப்படையினரின் அர்ப்பணிப்புக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸுக்கு எதிராக எதிர்ப்பு சக்தியை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# இரு டோஸ் தடுப்பூசி பெற்ற பின்னரும் முகக்கவசம் அணிய மறக்கவேண்டாம்

## சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே கோரிக்கை

கொழும்பு, ஜூலை 31

இரண்டு டோஸ் தடுப்பூசி பெற்றுக்கொண்ட பிறகும் முகக்கவசம் அணிய மறக்கவேண்டாம் என, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் தொடர்ந்து கூறுகையில், “ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் முகக்கவசம் அணி தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது.

எனினும், தற்போது அங்கு கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. அதனையடுத்து, மீண்டும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே, இலங்கையில் உள்ள மக்கள் இரண்டு டோஸ் தடுப்பூசி பெற்றுக்கொண்ட பிறகும் முகக்கவசம் அணிய மறக்க வேண்டாம்.

முகக்கவசம் அணியும்வரை, மீற்றர் இடைவெளியை கடைப்பிடிக்கும் வரை, மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு செல்வதை முடிந்தளவு தவிர்க்கும் வரை கொரோனா தொற்று ஏற்படும் அபாயம் குறைவாகவே காணப்படும் - என்றார்.

(அ)

# வீட்டுப் பணியாளர் நலன்பேண வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்

■ த.மனோகரன்



இன்று நாட்டின் சிறுவர் தொடர்பான அடிப்படைச் சட்டங்கள் மீறப்பட்டு பதினாறு வயதுக்குக் குறைந்தவர்களை வேலைக்கு "குறிப்பாக வீட்டு வேலைக்கு" அமர்த்துவது தொடர்பாகவும், அவ்வாறு அமர்த்தப்படும் பிள்ளைகளுக்கு ஏற்படும் அனர்த்தங்கங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டு வருகின்றது. இதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் மலையகப் பிள்ளைகள். குறிப்பாக தமிழ் பிள்ளைகள் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நாட்டின் சிறுவர் தொடர்பான அடிப்படைச் சட்டத்தின்படி பதினாறு வயதுக்குற்பட்டவர்கள் எதுவித வேலைகளிலும் அமர்த்தப்படக் கூடாது என்பது சட்டமாகவுள்ளதுடன் குறித்த வயது வரையான பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கல்வி கட்டாயமானது என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டங்கள் பல நாட்டில் இருந்த போதிலும் அவற்றில் அநேகமானவை நடைமுறையில் செயற்படுத்தப்படாத காகிதச் சட்டங்களாகவே உள்ளன.

சிறுவர் உரிமை தொடர்பான சட்ட விதிகள், அடிப்படை மனித உரிமை தொடர்பான சட்ட விதிகள், நாட்டின் தேசிய மற்றும் அரச கரும மொழிகள் தொடர்பான சட்டவிதிகள் என்று பலவற்றைச் சுட்டிக் காட்ட முடிகின்றது. இவை கண்டுக்கொள்ளப்படாதவையாகவே உள்ளன.

இன்று பதினாறு வயதுக்கு குறைந்த பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாகவும், அது தவறான செயல்பாடு என்பது பற்றியுமே அனைத்துத் தரப்பினராலும் கூறப்பட்டு வருகின்றது. அதற்கப்பாலும் சமூகப் பொறுப்பளர்கள் என்ற முறையில் நாம் சிந்திக்க வேண்டும். சமூகப் பாதுகாப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்.



எமக்கு கீழ் வேலை செய்கின்றார்கள் என்ற காரணத்தை முன்னிருத்தி தனிப்பட்ட சுதந்திரத்திற்கு, நலனுக்கு எதிராக எவராலும் அவர்களிடம் வேலை செய்பவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. சித்திரவதை செய்ய முடியாது. அதற்கு எந்தவொரு சட்டத்திலும் இடமில்லை. அவ்வாறு செயல்படுபவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளே.

சமுதாயத்தில் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் செல்வாக்குப் பெற்றவர்கள் தாம் இழைப்பது குற்றமென்று உணராது தமது செல்வாக்கால் எதையும் செய்துவிட்டு சட்டத்தின் முன் குற்றமற்றவர்கள் என்றும், தப்பித்து விடலாம் என்றும் எண்ணுவது தடுக்கப்பட வேண்டும். தடைசெய்யப்பட வேண்டும். அதற்கான சட்டவிதிகள் ஆக்கப்பட வேண்டும்.

தற்போது வீட்டு வேலைக்கு அமர்த்தப்படும் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர் தொடர்பாக மட்டுமே அதிகம் பேசப்படுகின்றது. குறித்த வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கு அமர்த்துவது முற்றாக தடைசெய்யப்பட வேண்டும். அது சட்டப்படி குற்றமானது என்பது தெளிவாக உணர்த்தப்பட வேண்டும்.

பதினாறு வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கனுப்பும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழந்தைகளை விற்பனை செய்பவர்களாகவும், வேலைக்கு அமர்த்துவோர் குழந்தைகளை பணத்திற்காக வாங்குபவர்களாகவும், தரகர்கள் தரகு வியாபாரத்தில் ஈடுபடுபவர்களாகவும் கணிக்கப்பட வேண்டியவர்களாவர்.

நாம் கவனம் செலுத்த வேண்டிய வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுவோர் தொடர்பான பிரச்னைகள் பல உள்ளன. பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட வேண்டும். அவற்றுக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் கண்டறியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படும் எந்த ஒருவரும் துன்புறுத்தல்களுக்கோ, துஷ்பிரயோகங்களுக்கோ ஆளாக்கப்படக் கூடாது, அவர்களது சுய கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் சம்பளத்திற்காக மட்டும் உழைக்கும் உழைப்பாளிகள் என்பது நினைவிற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகள் உட்பட பல நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகவும், ஏனைய வேலைகளுக்காகவும் செல்பவர்கள் அனுபவிக்கும் அவலங்கள், துயரங்கள் அடிக்கடி செய்திகளாக வெளிப்படுகின்றன. இனம், மதம், மொழி கடந்து பலர் வெளிநாடுகளில் பணிப்பெண்களாக வேலை செய்கின்றனர். அவதிப்படுகின்றனர்.

நம் நாட்டு பெண்கள் வெளிநாடுகளில் பாதுகாப்பற்று உள்ளனர் என்று கவலைப்படுவோர் நம் நாட்டுக்குள்ளேயே வீட்டு பணியாளர்கள் அவலப்படுவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தொழிற்துறைக்கும் அதற்கான பாதுகாப்பு சட்ட ஏற்பாடுகளுள்ளன. ஆனால், வீட்டுப் பணிப்பெண்களாக, வீட்டு வேலையாட்களாகப் பணிப்புரிபவர்களுக்கென்று குறிப்பிட்ட சட்ட விதிகள் இல்லாமை கவனத்தில்கொள்ளப்பட வேண்டும்.

எந்த வயதுடைய ஒருவரும் வீட்டு வேலைக்கு கட்டாயப்படுத்தி அமர்த்தப்படக் கூடாது. அதேபோல் கல்வியைத் தொடர வாய்ப்பிருந்தும் அதைத் தடுப்பதாக எக்காரணியும் இருக்கக் கூடாது. வீட்டு வேலையில் அமர்த்தப்படுவோர் அடிமைகளாகக் கருதப்படக் கூடாது. செய்யும் தொழிலுக்கேற்ப சம்பளம் பெறுபவர்களாக மட்டுமே கணிக்கப்பட வேண்டும். வீட்டு வேலையில் ஈடுபடுவோருக்கு எத்தனை பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமோ அவ்வாறே வேலைக்கு அமர்த்துபவர்களுக்கும் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அதாவது வீடுகளில் வேலை செய்வோரைப் போன்றே வேலை வழங்குபவர்களின் நலனும் பாதுகாக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதனால், வீட்டு வேலைக்கு அமர்த்தப் படுவோர் தொடர்பான விபரமான ஆவணமொன்று அவ்வாறு வேலையில் அமர்த்தப்படும் முகவரிக்கு உரித்தான கிராம அலுவலரால் பேணப்பட வேண்டும். குறித்த கிராமசேவை அலுவலர் தனது பிரிவிற்குட்பட்ட வீடுகளில் வீட்டு வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விபரங்களை அறிந்திருப்பது இருசாராருக்கும் அதாவது வேலை செய்வோருக்கும், வேலை வழங்குவோருக்கும் பயனுள்ளதாக அமையும்.

**"சிறுவர் தொடர்பான அடிப்படைச் சட்டத்தின்படி பதினாறு வயதுக்குற்பட்டவர்கள் எதுவித வேலைகளிலும் அமர்த்தப்படக் கூடாது என்பது சட்டமாகவுள்ளதுடன் குறித்த வயது வரையான பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கல்வி கட்டாயமானது என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டங்கள் பல நாட்டில் இருந்த போதிலும் அவற்றில் அநேகமானவை நடைமுறையில் செயற்படுத்தப்படாத காகிதச் சட்டங்களாகவே உள்ளன."**

அவ்வாறு பேணப்படும் ஆவணமொன்றின் பிரதி குறித்த பிரதேசத்திற்கு பொறுப்பான தொழில் அலுவலரூடாக குறித்த பிரதேச தொழில் அலுவலகத்திலும் கையளிக்கப்பட்டு பேணப்பட வேண்டும். வேலைக்கமர்த்தப்பட்ட வீடுகளுக்குச் சென்று ஆய்வு செய்யும் அதிகாரம் கிராமசேவை அலுவலர்களுக்கும், தொழில் திணைக்கள தொழில் அலுவலருக்கும் சட்டப்படி பொறுப்பு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன் மூலம் வீடுகளில் பணிப்பெண்களாக, வேலைக்காரர்களாக வேலைக்கமர்த்தப்படுபவர்களின் நலன்களைப் பாதுகாக்க முடியும். அத்துடன் இவ்வாறு வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் விபரங்கள் அவர்களின் சொந்த முகவரி அமைந்துள்ள கிராமசேவை அலுவலரிடமும், தொழிற்திணைக்கள தொழில் அலுவலரிடமும் இருப்பது நன்மை தரும்.

வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஆண், பெண் ஆகிய இரு தரப்பினரதும் வயது வித்தியாசமின்றி நலன்கள் பேண ஆவணப்படுத்தல் சிறப்பாக அமையும்.

வெறுமனே கூட்டங்கள் நடத்தி கருத்துக்களைத் தெரிவிப்பதை விடுத்து வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆயிரக்கணக்கானோரின் சுதந்திரமான, பாதுகாப்பான, நிம்மதியான இருப்புக்கு ஏற்ற வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், தொழிற்சங்கவாதிகள், சமூக நலன் விரும்பிகள், கல்விமான்கள், அதே போன்ற பொறுப்பு மிக்க தரப்பினர் இது தொடர்பில் அக்கறையுடன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அது மட்டுமல்ல இந்த பதினாறு வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கமர்த்தும் போது அது அவர்கள் குழந்தை தொழிலாளர்கள் என்று கூறப்படுவதுடன் அது சர்வதேச சிறுவர் உரிமைச் சட்டத்தை மீறுவதாக அமையும். அவ்வாறு இடம்பெறுவது சர்வதேச தொழிலாளர் சாசனத்தின்படி தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்களை அது ஆணோ, பெண்ணோ வேலையில் அமர்த்துபவர்கள், அதற்கு உடந்தையாக இருந்தவர்கள், இருப்பவர்கள் சட்டப்படி தண்டனை வழங்கப்பட வேண்டிய குற்றவாளிகளாக்கப்படுவர். அதுவே பொதுவாக நடைமுறையிலுள்ள சட்டமுமாகும். நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயமானதாகும்.

**கட்டுரையாளர் த.மனோகரன்,**
**ஓய்வு பெற்ற கைத்தொழில் நீதிமன்ற பதிவாளர்**




# பொதுமுடக்கத்திலேயும் சிட்னியில் நடைபெற்ற கண்டனப்பேரணி

■ நியூசிலாந்து சிற்சபேசன்

**“அவுஸ்திரேலியாவின் சனநாயகக்கட்டமைப்பிலே பொதுமக்களின் கருத்துக்கள் கவனிக்கப்படுகின்றன. அவ்வாறு கவனிக்கப்படவில்லை என்று கருதுகின்ற பட்சத்தில், எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான சூழலை அவுஸ்திரேலியா கொண்டிருக்கின்றது. ஆனால், கொரோனாத்தொற்றின் சமூகப்பரவல் அதிகரிக்கின்றவேளையில், ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்றுகூடியமை அவுஸ்திரேலியா சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.”**

அவுஸ்திரேலியாவின் சிலபிரதேசங்கள் கடந்த சிலவாரங்களாக டெல்டா திரிபினால் அவதியுறுகின்றன. சிட்னியில் சமூகப்பரவல் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. அதனால் பொதுமுடக்கம் நீட்டிக்கப்பட்டிருக்கின்றது. சமூகப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் மெல்பேர்ன் முன்னிலை வகிக்கின்றது. அதனால், அங்கு கட்டுப்பாடுகள் பெருமளவில் தளர்த்தப்படுகின்றன.

கடந்த ஆண்டு மார்ச் முதல் மே வரையான காலப்பகுதியில் முதலாவது பொதுமுடக்கத்தை அவுஸ்திரேலியா எதிர்கொண்டது. அதன் பின்னர் பொதுமுடக்கம் என்ற சொற்பதமே அவுஸ்திரேலியர்களுக்கு ஒவ்வாமையாகியது. ஐம்பத்திரண்டு தினங்கள் வரையில் முதலாவது பொதுமுடக்கம் நீடித்தது. அதன் பின்னர், நான்கு பொதுமுடக்கங்களை மெல்பேர்ன் எதிர்கொண்டிருக்கின்றது. அதேபோன்று, பிறிஸ்பேர்னும் மூன்று மேலதிக பொதுமுடக்கங்களை எதிர்கொண்டிருக்கின்றது. மற்றைய நகரங்களும் வெவ்வேறு அளவுகளில் பொதுமுடக்கத்தை எதிர்கொண்டன. ஆனால், ஐந்து மில்லியன் சனத்தொகையைக் கொண்ட பெருநகரமான சிட்னி, 2020 மே மாதத்துக்குப் பின்னர் பொதுமுடக்கத்துக்கு உட்படவில்லை. அதற்குப்பதிலாக, தொற்றாளர்களை வேகமாக அடையாளம் காணுகின்ற முறையை (கன்டாக்ட் டிரேசிங்) நடைமுறைப்படுத்தியது. அதன் மூலமாக சமூகப்பரவலைக் கட்டுப்படுத்தியது.

ஆனால், வேகமாகப் பரவுகின்ற டெல்டா திரிபின் சமூகப்பரவலை அடையாளம் காண்பதில் சிட்னி திணற ஆரம்பித்தது. அதனால் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. யூன் 26ல் பொதுமுடக்கத்தை அறிவித்தது. அதனையும்கூட, முழுமனதுடன் மேற்கொள்ளவில்லை என்னும் தோற்றப்பாடே தென்பட்டது. சிட்னிவாசிகளும் பொதுமுடக்கம் தொடர்பில் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அதனால், சமூகப்பரவல் படிப்படியாக அதிகரித்தது. ஒருகட்டத்தில், நிலைமை எல்லைமீறுவதை அரசு உணர்ந்துகொண்டது. அதன்பின்னர், பொதுமுடக்கக் கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்த ஆரம்பித்தது. அதனை ஏற்றுக்கொள்ள சிட்னிவாசிகள் திணறினார்கள். அதனால் வார்த்தைகளில் பொறிபறந்தன. சுட்டுவிரல்கள் நீண்டன. பொதுமுடக்கத்தை அறிவிப்பதில் மாநில அரசு காலத்தை விரயம் செய்துவிட்டது. அதனை அறிவித்த பின்னர்கூட, முழுமையாக அமுல்படுத்தவில்லை. அந்தவகையிலே, சமூகப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் மாநில அரசு தவறிவிட்டது போன்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. மறுவளத்தில், போதிய தடுப்பூசி வழங்கப்பட்டிருந்தால் தற்போதைய திணறல்நிலை ஏற்பட்டிருக்காது என்னும் கருத்து சிட்னியின் மாநில ஆட்சிப்படிக்கட்டுகளில் எதிரொலித்தது. எதுஎப்படியாகிலும், சமூகப்பரவலின் அதிகரிப்பினால் சிட்னிவாசிகளிடையே அதிருப்தியே அதிகரித்தது.

இத்தகைய பின்னணியிலேயே, பொதுமுடக்கத்துக்கு எதிரானதெனச் சொல்லப்படுகின்ற கண்டனப்பேரணி, யூலை 24ல் சிட்னியில் நடைபெற்றது. ஆனால், அதனைப் பரந்துபட்ட மக்கள் ஆதரவைப் பெற்ற பேரணி என்று கருதமுடியவில்லை. அன்றைய தினத்திலேயே, சுதந்திரத்துக்கான உலகளாவிய கண்டனப்பேரணி என்னும் கோஷத்துடன் பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளிலும், அவுஸ்திரேலியாவின் வேறு சிலநகரங்களிலும் பேரணிகள் நடைபெற்றன. பேரணியின் நோக்கம் ஒன்றெனச் சொல்லப்பட்டாலும், பேரணியில் காணப்பட்ட பதாதைகள் மாறுபட்ட நோக்கங்களையே வெளிப்படுத்தின. எதுஎப்படியாகிலும், சிட்னி மெல்பேர்ன் நகரங்களைப் பொறுத்தவரையில், கொரோனாப் பேரிடர் ஏற்படுத்துகின்ற நிச்சயமற்ற சூழலின் வடிகாலாகவே, யூலை 24ல் நடைபெற்ற கண்டனப்பேரணியைக் காணமுடிந்தது.

மெல்பேர்ன் நகரின் மத்தியிலுள்ள பிளிண்டேர்ஸ் தெருப்பகுதியில் ஆரம்பமாகிய பேரணி, பாராளுமன்றப்பகுதிவரையில் நடைபெற்றது. சிட்னியில் பிராட்வே பகுதி, நகரமண்டபப் பகுதிகளில் நடைபெற்ற பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். பேரிடர் காலத்தில், பொதுசுகாதார விதிமுறைகளை மீறி குழுமியிருந்த மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்த பொலிசார் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டனர். மக்கள் கூட்டாகத் திரளும்போது ஏற்படுகின்ற மனப்பான்மை உச்சம்தொட்டபோது, பொலிசாருக்கு எதிரான வன்முறை வெடித்தது. பொலிசார் மீது பூச்சட்டிகள், தண்ணீர் மற்றும் மைக்குவளை போன்றவை வீசப்பட்டன. பொலிஸ் குதிரையொன்றும் தாக்கப்பட்டது. ஆனாலும், பொலிசார் கண்ணியத்தோடும் கட்டுக்கோப்புடனும் செயற்பட்டனர்.

அதேசமயத்தில், சட்டம் மற்றும் ஒழுங்கு மீறலில் ஈடுபட்டோர் தொடர்பில் உரியநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. விதிமுறைகளை மீறியோரை அடையாளப்படுத்துகின்ற முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. சிசிடிவி கமெரா, பொலிசாரின் உடலில் பொருத்தப்படுகின்ற பொஃடிக்கமெரா, சோஷல் மீடியாவில் பகிரப்பட்ட ஒளிக்கீற்று என்பவை வழியாக தனிநபர்களை அடையாளப்படுத்துகின்ற செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கூடவே, பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பொலிஸ் கோரியுள்ளது. விதிமுறைகளை மீறியோருக்கு தண்டம் விதிக்கப்படுகின்றது. வன்முறையில் ஈடுபட்டோர் கைதாகின்றனர். நீதிமன்ற விசாரணைக்குப் பாரப்படுத்தல் என பொலிஸ் நடவடிக்கைகள் தொடருகின்றன.

அவுஸ்திரேலியாவின் சனநாயகக்கட்டமைப்பிலே பொதுமக்களின் கருத்துக்கள் கவனிக்கப்படுகின்றன. அவ்வாறு கவனிக்கப்படவில்லை என்று கருதுகின்ற பட்சத்தில், எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான சூழலை அவுஸ்திரேலியா கொண்டிருக்கின்றது. ஆனால், கொரோனாத்தொற்றின் சமூகப்பரவல் அதிகரிக்கின்றவேளையில், ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்றுகூடியமை அவுஸ்திரேலியா சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தனிமனித இடைவெளி பேரணியில் பேணப்படவில்லை முகக்கவசம் அணிந்தவர்களைத் தேடவேண்டியிருந்தது. ஒட்டுமொத்த சமூகத்தின் நலனைக் கவனத்தில் கொள்ளாத கண்டனப்பேரணி ஏமாற்றத்தையும், மனவேதனையையும் தருவதாக நியூசவுத்வேல்ஸ் தலைமை அமைச்சர் வருந்தினார். பேரணியில் கலந்துகொண்டவர்களைச் சுயநலவாதிகள் என்று சாடியதோடு நின்றுவிடாமல், கொரோனாத்தொற்றுக்கு தடுப்பூசி வழங்கலாம், ஆனால் சுயநலத்துக்கு தடுப்பூசி வழங்கமுடியாது என விக்டோரியா தலைமைஅமைச்சரின் வார்த்தைகளில் அனல்பறந்தது.

சமூகபரவல் அதிகரிக்கின்ற சூழலில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட கண்டனப்பேரணி, ரோம் மாநகரம் பற்றியெரிந்தபோது பிடில் வாசித்துக்கொண்டிருந்த நீரோமன்னனை நினைவுபடுத்தியது. பேரணியில் கலந்துகொண்டவர்கள் மூலமாக சமூகப்பரவல் அதிகரிக்குமோ என்னும் அச்சமும் ஏற்பட்டிருக்கின்றது. அதனால், பேரணியில் கலந்துகொண்டவர்களைத் தொற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும் என்னும் அபிப்பிராயமும் பொதுச்சுகாதார வல்லுனர்களால் முன்வைக்கப்படுகின்றது. சுருங்கச் சொல்வதானால், பொதுமுடக்கத்துக்கு எதிரான கண்டனப்பேரணி, பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகின்றதோ என்னும் அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. ■



# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ..........................................

ii) .......................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..........................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .......................................... (2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .................................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் .................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது. (2 புள்ளிகள்)

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : ..........................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .......................................... (2 புள்ளிகள்)

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ..........................................

ii) old / How / you? / are : .......................................... (2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..........................................

ii) தொளஹ : .......................................... (02 புள்ளிகள்)

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................

ii) அங்கே பாருங்கள் : .......................................... (02 புள்ளிகள்)


❖ **விடை எழுதுக.**

**16)** | 7 | 8 | / | 3 | 0 | இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..........................................


**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..........................................

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ..................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ..................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ........... ii) 18, 15, 12, ............., ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

..................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.................................. (30 புள்ளிகள்)

# ஒரு மாதத்தின் பின் தொற்றாளர்கள் அதிகரிப்பு மீளவும் இறுக்கமான கட்டுப்பாடுகள் வரக்கூடும்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 31

“இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தின் பின்னர் மீண்டும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இல்லையேல் மீண்டும் இறுக்கமான கட்டுப்பாடுகளை நாம் விதிக்க வேண்டி வரும்.”

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கையில் நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் 1,900 ஐத் தாண்டியுள்ளது.

இதேவேளை, நேற்று 2,300 இற்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் புத்தாண்டுக் கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள்.

சில கட்டுப்பாடுகளில் தளர்வுகள் வந்தமையால் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

எனவே, மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இல்லையேல் மீண்டும் இறுக்கமான கட்டுப்பாடுகளை நாம் விதிக்க வேண்டி வரும்.

கொரோனாத் தொற்றுப் பரவலைக்



கட்டுப்படுத்துவதற்காகப் பொதுமக்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்” - என்றார். (இ)

## முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது பருத்தித்துறை

வடமராட்சி, ஜூலை 31

பருத்தித்துறை நகரம் கொரோனா முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

நகர மையப் பகுதியை உள்ளடக்கிய கிராம சேவையாளர் பிரிவில் பலருக்குக் கொரோனா தொற்று அதிகரித்ததைத் தொடர்ந்து கடந்த15ஆம் திகதி முதல் அப்பகுதி முடக்கப்பட்டிருந்தது.

நகரப் பகுதியில் விடுவிக்கப்பட்டதால் இ.போ.ச., தனியார் பஸ் நிலையங்கள், பொதுச்சந்தை, சில வர்த்தக நிலையங்கள், வங்கிகள் என்பன இயங்குகின்றன. எனினும், பொதுமக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

அனைத்துத் துறை வர்த்தகர்களும் பி.சி.ஆர். செய்துகொள்ள வேண்டும் என நகர சபை உத்தரவிட்டதைத் தொடர்ந்து பி.சி.ஆர். செய்துகொள்ளாத வர்த்தகர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதேநேரம் மீன்சந்தை இன்னமும் திறக்கப்படவில்லை. பெரும்பாலும் இன்று சனிக்கிழமை முதல் மீன்சந்தை வழமையான இடத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 02)

# தொற்றாளர்கள் மூன்று இலட்சத்தை கடந்துள்ளமை ஆபத்தான நிலைமை

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 31

**நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தைக் கடந்திருப்பது சிறந்த அறிகுறியல்ல என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் குறுகிய காலத்துக்குள் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தைக் கடந்துள்ளது. இது சிறந்த அறிகுறியல்ல. ஆபத்தான நிலைமையை இது எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைத் தொடர்ந்தும் பேணாவிடின் மீண்டும் கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள நேரிடும்” - என்றார்.

நாட்டில் நேற்றுமுன்தினம் இரவு வரையில் 3 இலட்சத்து 4 ஆயிரத்து 161 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 2 இலட்சத்து 73 ஆயிரத்து 496 பேர் குணமடைந்துள்ளனர். 4 ஆயிரத்து 324 பேர் உயிரிழந்துள்ளனர். ஏனைய தொற்றாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

## வெளிநாட்டுப் பெண் தூக்கிட்டு தற்கொலை

கொழும்பு, ஜூலை 31

கொழும்பு 06, வெள்ளவத்தைப் பகுதியில் அமைந்துள்ள தொடர்மாடி குடியிருப்பில் வெளிநாட்டுப் பெண்ணொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் குறித்த பெண் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் வெள்ளவத்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். (இ)

## அஸாத் ஸாலியின் உரிமை மனு ஒகஸ்ட் 10இல் விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 31

மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலியின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை விசாரிப்பதற்கான தினத்தை உயர் நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.

இந்த மனு குறித்து நேற்றுமுன்தினம் பரிசீலிக்கப்பட்ட வேளையில், அதனை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி விசாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இஸ்லாமிய சட்டம் தொடர்பாகச் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டமைக்காகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டு தடுப்பில் உள்ளார். அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக அவர் சார்பில் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவே எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி விசாரணைக்கு வருகின்றது. (இ)

# மொட்டு கூட்டு அரசிலிருந்து பங்காளிகள் விலக வாய்ப்பு

## பாதிப்பில்லை என்கிறார் இராஜாங்க அமைச்சர் நிஷாந்த

கொழும்பு, ஜூலை 31

“ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் ஒரு சில பங்காளிக் கட்சிகள் கூட்டணியில் இருந்து வெளியேறுவதற்கான வாய்ப்பு உண்டு. ராஜபக்ஷ அரசில் எவரும் இணைந்துகொள்ளலாம் விருப்பமில்லாவிடின் தாராளமாக வெளியேறலாம்.”

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

பங்காளிக் கட்சிகள் வெளியேறுவதால் எவ்வித பாதிப்பும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கு ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“பல்வேறு கொள்கைகளையுடைய அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியை அமைத்துள்ளோம்.

இந்தக் கூட்டணியில் பொதுஜன முன்னணியே பிரதான கட்சியாக உள்ளது. கூட்டணிக்குள் கருத்து வேறுப்பாடுகள் பல காணப்படுகின்றன.

அரசிலிருந்து வெளியேறவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சில உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சுப் பதவிகளையும், இராஜாங்க அமைச்சுப் பதவி



களையும், அரச வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் அரசிலிருக்க விருப்பமில்லையென்றால் வெளியேறுவோம் என்று கூறிக் கொண்டிருக்காமல் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம்” - என்றார். (இ)

## சஜித் தலைமையிலான அணியின் அழைப்பை நிராகரித்தார் மங்கள

கொழும்பு, ஜூலை 31

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்வது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நிராகரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்வதற்கு மங்கள சமரவீர ஆர்வம் கொண்டிருப்பாரேயானால், அது குறித்து கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் கலந்துரையாடத் தயாராக இருப்பதாக அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர் ரெஹான் ஜயவிக்ரம தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் மங்கள சமரவீர அவரது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு மறுப்பு வெளியிட்டிருக்கின்றார். (இ)

# இந்தியச் செய்தியாளர் தனிஷ் சித்திக் தலிபான்களால் கொடூரக் கொலை!

## அமெரிக்கா வெளியிடும் பரபரப்புத் தகவல்

வாஷிங்டன், ஜூலை 31

இந்திய புகைப்பட செய்தியாளர் தனிஷ் சித்திக்கை தலிபான்கள் கொடூர கொலை செய்துள்ளனர் என்ற அதிர்ச்சி தகவலை அமெரிக்க ஊடகம் ஒன்று தெரிவித்து உள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் ஜனாதிபதி அஷ்ரப் கனி தலைமையிலான ஆளும் அரசுக்கு எதிரான தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஒடுக்க அரசு ராணுவ வீரர்களை பயன்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் கந்தகாரில் நடந்த தலிபான்களுக்கு எதிரான போரில், இந்தியாவை சேர்ந்த ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன புகைப்பட செய்தியாளர் தனிஷ் சித்திக் (வயது 38) கடந்த 16ஆம் திகதி மரணம் அடைந்துள்ளார். அவரது மறைவுக்கு ஆப்கானிஸ்தான் அதிபர் உள்பட பல தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில், கொரோனா 2வது அலையின்போது கங்கை நதிக்கரையில் பிணங்கள் எரிக்கப்பட்டது, ரோஹிங்கியா முஸ்லிம்களின் துயர வாழ்வு குறித்து இவர் எடுத்த புகைப்படங்கள் குறிப்பிடத்தக்கவை.

ரோஹிங்கியாக்களின் துயர வாழ்வு பற்றி பதிவு செய்ததற்காக புலிட்சர் விருது பெற்றவர். உலகம் முழுவதும் இவரது மறைவு பெரும் சோகம் ஏற்படுத்தியது. பத்திரிகையாளர்கள் சங்கம் இதுபற்றி விசாரணை நடத்த கோரியுள்ளது.

இந்நிலையில் புகைப்பட செய்தியாளர் தனிஷ் சித்திக்கின் மரணத்தில் தங்கள் பங்கு எதுவும் இல்லை எனவும், அவர் உயிரிழக்க நாங்கள் காரணமில்லை எனவும் தலிபான்கள் தெரிவித்தனர். இரு தரப்பினர் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் அவர் எப்படி பலியானார் என்று தங்களுக்கு தெரியாது என அந்த அமைப்பின்



செய்தி தொடர்பாளர் சபியுல்லா முஜாகித் கூறினார்.

போர்க்களத்திற்கு வரும் பத்திரிகையாளர்கள் தங்களிடம் முன்கூட்டியே அதுபற்றி தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், அவ்வாறு தெரிவித்தால் அவர்களை பத்திரமாக பார்த்து கொள்வோம் எனவும் அவர் கூறினார். இதனால், ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு படையினருடன் செய்தி சேகரிக்க சென்ற சித்திக்கின் மரணத்தில் ஏற்பட்ட சர்ச்சை தொடர்ந்து நீடித்தது.

இந்நிலையில், தனிஷ் சித்திக் தலிபான்களால் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளார் என அதிர்ச்சிகர தகவல் வெளியாகியுள்ளது. ஆப்கானிஸ்தானில் கந்தகார் நகரின் ஸ்பின் போல்டாக் மாவட்டத்தில் படை வீரர்களுக்கும், தலிபான்களுக்கும் இடையே நடைபெற்ற மோதல்களை படம் பிடிக்க சென்றிருந்தபோது, இரு தரப்பு மோதலில் நடந்த துப்பாக்கி சூட்டில் சித்திக் பலியானார் என கூறப்பட்டது.

இந்த நிலையில், அவர் துப்பாக்கி சூட்டில் கொல்லப்படவில்லை. அவரை நன்கு தெரிந்து கொண்ட பின்னரே தலிபான்கள் கொடூரமாக கொலை செய்து உள்ளனர் என அமெரிக்க பத்திரிகையான வாஷிங்டன் எக்சாமினர் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில், போரில் தலிபான்கள் இரு அணிகளாக பிரிந்துள்ளனர். சித்திக் மற்றும் அவருடன் இருந்த 3 ஆப்கானிஸ்தான் படை வீரர்கள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் ஏற்பட்ட காயம் காரணமாக உள்ளூர் மசூதி ஒன்றில் சித்திக் முதலுதவி பெற்று கொண்டிருந்தார்.

சித்திக் மசூதியில் இருக்கும் தகவலை அறிந்த தலிபான்கள், சித்திக்கை பிடித்து வந்து, அவருடைய அடையாளத்தை உறுதி செய்து கொண்டு, அவரை தலையில் தாக்கியதுடன், உடலை குண்டுகளால் துளைத்து உள்ளனர். ஆனால் உள்ளூர் விசாரணையில், தலிபான்கள் மசூதியை மட்டும் தாக்கியதாக கூறினர்.

தலிபான்கள் மசூதியில் சித்திக்கை பிடித்த போது அவர் உயிருடன் இருந்ததாகவும், சித்திக்கின் அடையாளத்தை சரிபார்த்து பின்னர் அவரையும், அவருடன் இருந்த வீரர்களையும் தூக்கிலிட்டதாகவும் கூறப்படுகிறது. அவரை காப்பாற்ற முயன்ற ஆப்கானிஸ்தான் படைதளபதியும், அவரது குழுவின் மீதமுள்ளவர்களும் உயிரிழந்தனர்.

பொது வெளியில் வெளியிடப்பட்ட புகைப்படத்தில் சித்திக்கின் முகம் அடையாளம் தெரியும்படி இருந்தாலும், கிடைத்த வேறு புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் அவரை துன்புறுத்தி கொலை செய்துள்ளது தெரிய வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதனை அமெரிக்க பாதுகாப்பு செயலக ஆலோசகர் மைக்கேல் ரூபின் என்பவரும் உறுதி செய்துள்ளார். தலிபான்கள் சித்திக்கை பிடித்த போது அவர் உயிருடனேயே இருந்துள்ளார் என்றும், அவரை அடையாளம் கண்டு கொண்டு பின்பு அவரையும், அவருடன் இருந்த வீரர்களையும் படுகொலை செய்துள்ளனர் என்றும் ரூபின் தெரிவித்துள்ளார்.

# தலிபன்களுக்கும் எங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை!



இஸ்லாமாபாத், ஜூலை 31

"ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ அல்லது செய்யவில்லையோ, அதற்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை. நாங்கள் அவர்களுக்கு பொறுப்பு இல்லை" என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், ஆப்கானிஸ்தான் பத்திரிகையாளர்கள் மத்தியில் நேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது: -

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ அல்லது செய்யவில்லையோ, அதற்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை. நாங்கள் அவர்களுக்கு பொறுப்பு இல்லை. நாங்கள் தலிபான்களின் செய்தி தொடர்பாளர்களும் அல்ல. நாங்கள் ஆப்கானிஸ்தானில் அமைதியைத்தான் விரும்புகிறோம்.

அமெரிக்கா ஆதரவு பெற்ற ராணுவ தீர்வு வேண்டுமா, எல்லோரையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வு வேண்டுமா என்பதை ஆப்கானிஸ்தான் மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். பாகிஸ்தானில் 30 லட்சம் அகதிகள் உள்ளனர். 50 ஆயிரம் பேர், 1 லட்சம் பேரைக்கொண்ட அகதிகள் முகாம்கள் உள்ளன. எனவே தலிபான்கள் செயலுக்கு நாங்கள் எப்படி பொறுப்பு ஆக முடியும்?

பாகிஸ்தான் எல்லையில் வேலி போடும் வேலையில் 90 சதவீதத்தை முடித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானின் நலனுக்காக உள்நாட்டுப்போர் மூளவில்லை. தற்போது எனது அரசு, ஆப்கானிஸ்தானை வெளியில் இருந்து கட்டுப்படுத்த முடியாது என்ற நம்புகிறது" என அவர் கூறினார்.

# கட்டுப்பாடு தளர்வின் எதிரொலி பிரிட்டனில் கொரோனா தீவிரம்

லண்டன், ஜூலை 31,

பிரிட்டனில் நிபுணர்கள் எச்சரிக்கையை மீறி கட்டுப்பாடுகளில் தளர்வு அறிவிக்கப்பட்ட நிலையில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து உள்ளது.

பிரிட்டன் நாட்டில் பிரதமர் போரிஸ் ஜான்சன் கடந்த 19ஆம் திகதி முதல் ஊரடங்கு கட்டுப்பாடுகளில் தளர்வுகளை அறிவித்து உத்தரவிட்டார்.

இதனால், பொது இடங்களில் மக்கள் கூடுவதற்கு தடையில்லை. முக கவசம் அணிவது, சமூக இடைவெளி பின்பற்றுவது ஆகியவற்றில் விலக்கு அளிக்கப்பட்டன. இதனால் மக்கள் இயல்பு நிலையை நோக்கி திரும்பினர்.

இதேபோன்று, இரவு நேர மதுபான விடுதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் முழுமையான கட்டுப்பாடுகளை தளர்த்துவது எதிர்காலத்தில் தொற்றை அதிகரிக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்து இருந்தனர்.

அந்நாட்டில் 60% மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று சற்று குறைந்து இருந்தது. இதனை தொடர்ந்து அங்கு முழுமையாக கரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

இந்த நிலையில் பிரிட்டனில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் 31, 117 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது.

# அணு ஆயுத திறனை மேம்படுத்த சீனா நடவடிக்கை செயற்கைக்கோள் படங்களால் அமெரிக்கா கவலை

வாஷிங்டன், ஜூலை 31

அணு ஆயுத திறனை மேம்படுத்துவதற்கு சீனா நடவடிக்கை எடுத்து வருகிறது. இதை செயற்கைக்கோள் படங்கள் அம்பலப்படுத்தி உள்ளன. இதில் அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

உலகின் இரு பெரும் வல்லரசு நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே தீராப்பகை நிலவி வருகிறது. ஏற்கனவே இரு நாடுகளும், ஒன்றுக்கு எதிராக மற்றொன்று கடுமையான வரிகளை விதித்து வர்த்தகப் போரில் ஈடுபட்டு உலக அரங்கை அதிர வைத்தன.

இப்போது கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவலுக்கு பின்னர் இரு தரப்பு உறவு மேலும் மோசமாகி உள்ளது. கொரோனா வைரசை உகான் நகரில் உள்ள பரிசோதனைக்கூடத்தில் சீனா உருவாக்கி கசிய விட்டுள்ளதாக அமெரிக்கா சந்தேகிக்கிறது.

இதுபற்றி உளவு அமைப்புகள் விசாரித்து அறிக்கை அளிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட் டுள்ளார். ஆனால் சீனா இந்த குற்றச்சாட்டை மறுத்து வருகிறது.

இந்த தருணத்தில் சீனா அணு ஆயுத திறனை மேம்படுத்த அதிரடியாக களம் இறங்கி உள்ளது. சீனாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள சின்ஜியாங் மாகாணத்தின் மேலிருந்து எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் படங்கள், சீனா அணு ஏவுகணைகளை ஏவுகிற தளத்தினை கட்டமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதை காட்டுவதாக எப்.ஏ.எஸ். என்று அழைக்கப்படுகிற அமெரிக்க விஞ்ஞானிகள் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது. மேற்கு சீனாவில் கடந்த 2 மாதங்களில் அந்த நாடு கட்டுகிற இரண்டாவது அணு ஏவுகணை தளம் இது என கூறப்படுகிறது.

இந்த ஏவுதளத்தில் ஏவுகணைகளை சேமித்து வைப்பதற்கும், ஏவுவதற்கும் வசதியாக 110 குழிகள் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. கடந்த மாதம் சீனாவின் கான்சு மாகாணத்தில் யுமென் என்ற பாலைவன பகுதியில் சீனா இப்படி 120 குழிகளை அமைத்துள்ளதாக அமெரிக்காவின் 'தி வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து இப்போது சீனா கட்டமைத்து வருகிற அணு ஏவுகணை ஏவுதளம், யுமெனுக்கு வட மேற்கில் 380 கி.மீ. தொலைவில் ஹாமி என்ற இடத்தில் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்க ராணுவ தலைமையகம் பென்டகன், சீனா தனது அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்துவதற்கு தயாராகி வருவதாக தெரிவித்தது. சீனா கடந்த ஆண்டு 200-க்கும் மேற்பட்ட அணுகுண்டுகளை குவித்துள்ளதாகவும், அதை இருமடங்காக உயர்த்த திட்டமிட்டிருப்பதாகவும் பென்டகன் அப்போது கூறியது நினைவுகூரத்தக்கது. அமெரிக்காவும், ரஷியாவும் ஆயுத கட்டுப்பாடு பற்றி பேச தயாராகி வருகிற நிலையில், சீனா அணு ஆயுத திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதைக் காட்டுகிற செயற்கைகோள் படங்களும், தகவல்களும் அதிர வைக்கின்றன. சீனா ஆயுதக்கட்டுப்பாடு தொடர்பாக எந்தப் பேச்சிலும் அங்கம் வகிக்கவில்லை.

சீனா அணு ஆயுத திறனை மேம்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதற்கு அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. இது பற்றி அமெரிக்க பாதுகாப்பு துறையின் அங்கமான அமெரிக்க மூலோபாய கட்டளை மையம் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், "2 மாதங்களில் இரண்டாவது முறையாக சீனா அணு ஏவுகணை தளத்தினை அமைக்கும் நடவடிக்கையில் இறங்கி உள்ளது. இது உலகுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது" என கூறி உள்ளது.




# தொடரை வென்ற இலங்கை அணி!

இந்தியா அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில், இலங்கை கிரிக்கெட் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை கிரிக்கெட் அணி கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் 1-1 என சமநிலை அடைந்த நிலையில், தொடரினை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று முன் தினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி, முதல் ஓவரிலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது.

அணியின் தலைவரான ஷிகர் தவான், துஸ்மந்த சமீரவின் பந்துவீச்சுக்கு தனஞ்சய டி சில்வாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய இளம் வீரர் தேவ்தத் படிக்கல் ஆரம்பமே சற்று தடுமாற்றத்தை எதிர்கொண்டிருந்த நிலையில், 9 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்பிறகு களமிறங்கிய சஞ்சு சம்சன் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஓய்வறை திரும்ப, அதே ஓவரின் இறுதிபந்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ருத்துராஜ் கெய்க்வாட் 14 ஓட்டங்களுடன் விடை பெற்றார்.

பின்னர் களமிறங்கிய நிதிஷ் ரணா, புவனேஸ்வர் குமாருடன் ஜோடி சேர்ந்தார். இதன்போது புவனேஸ்வர் குமார் நிதான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த நிதிஷ் ரணா, 6 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களமிறங்கிய குல்தீப் யாதவ் களத்தில் இருக்க, நிதான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய புவனேஸ்வர் குமார் 16 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய ராகுல் சாஹார் 5 ஓட்டங்களுடனும் வருண் சக்கரவர்த்தி ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழக்க, மறுமுனையில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக குல்தீப் யாதவ் 23 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காது இறுதிவரை களத்தில் இருந்தார்.

இதன்படி இந்தியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 81 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது இலங்கை அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 4 விக்கெட்டுகளையும் தசன் சானக 2 விக்கெட்டுகளையும் துஸ்மந்த சமீர மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

குறிப்பாக இப்போட்டியில் துடுப்பாட்டத்தில் தடுமாறிய இந்தியா, மிகக் குறைந்த 10 ஓவர்களுக்கான ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்தது.

இந்தியா அணி, 10 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 36 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதுவே இந்திய அணியின் மிகக் குறைந்த 10 ஓவர்களுக்கான ஓட்ட எண்ணிக்கை ஆகும்.

அத்துடன் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு இந்தியக் கிரிக்கெட் அணி, பெற்றுக்கொண்ட இரண்டாவது மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

முன்னதாக அவுஸ்ரேலியா அணிக்கெதிராக 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 32 ஓட்டங்களை பெற்றிருந்ததே மோசமான சாதனையாக உள்ளது.

இதுதவிர ஒரு அணி 20 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 20 ஓவர்களையும் பூர்த்தி செய்து, மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையை பதிவுசெய்த இரண்டாவது அணியாக இந்தியா அணி பெயர்பெற்றுள்ளது.

முதல் அணியாக மேற்கிந்திய தீவுகள் அணி உள்ளது. அந்த அணி 2010ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கெதிராக 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 79 ஓட்டங்களை பெற்றுள்ளது.

அத்துடன் ரி-20 கிரிக்கெட்டில் இந்தியக் கிரிக்கெட் அணியின் மூன்றாவது மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை ஆகும்.

முன்னதாக இந்தியா அணி, அவுஸ்ரேலியா அணிக்கெதிராக 74 ஓட்டங்களையும் நியூஸிலாந்து அணிக்கெதிராக 79 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

இதனைத்தொடர்ந்து 82 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 14.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்பு வெற்றி இலக்கை கடந்தது.

இதன்போது இலங்கை அணி சார்பில், அவிஷ்க பெனார்டோ 12 ஓட்டங்களையும் மினோத் பானுக 18 ஓட்டங்களையும் சதீர சமரவிக்கிரம 6 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தனஞ்சய டி சில்வா 23 ஓட்டங்களுடனும் வனிந்து ஹசரங்க 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ராகுல் சாஹார் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக நான்கு ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்திய வனிந்து ஹசரங்க தெரிவுசெய்யப்பட்டார்.

அத்துடன் இத்தொடரில் மூன்று போட்டிகளில் விளையாடி மொத்தமாக 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதற்காக வனிந்து ஹசரங்க தொடரின் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

குறிப்பாக பிறந்த நாளில் ஒருவரின் சிறந்த பந்து வீச்சுப் பெறுதியையும் வனிந்து ஹசரங்க முறியடித்துள்ளார்.

இதுவரை தென்னாபிரிக்க அணியின் இம்ரான் தாஹிருக்கு இது சொந்தமாக இருந்தது. அவர் 21 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

கடந்த 12 வருடங்களுக்கு அதாவது 2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை அணி முதல் தடவையாக ரி-20 தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் வெற்றியுடன் இந்திய அணிக்கு எதிராக இலங்கை அணி கைப்பற்றியுள்ள ரி-20 தொடர், இந்திய அணிக்கு எதிராக இலங்கை அணி கைப்பற்றிய முதல் ரி-20 தொடராக அமைந்துள்ளது. 21 ரி-20 போட்டிகளுக்கு பிறகு இந்த தொடரின் வெற்றி வசமாகியுள்ளது.



## சீனா முன்னிலை!

2020 ரோக்கியோ ஒலிம்பிக் தொடரின், பதக்கப் பட்டியலில் சீனா தொடர்ந்தும் முன்னிலையில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

இதன்படி 16 தங்கம், 7 வெள்ளி, 10 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 33 பதக்கங்களை சீனா வென்று முதலிடத்தில் உள்ளது.

இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ள ஜப்பான், 15 தங்கம், 4 வெள்ளி 7 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 26 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

14 தங்கம், 16 வெள்ளி, 11 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 41 பதக்கங்களை பெற்று அமெரிக்கா மூன்றாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

9 தங்கம், 12 வெள்ளி, 9 வெண்கலம் என அடங்கலாக மொத்தமாக 30 பதக்கங்களுடன் ரஷ்யா நான்காவது இடத்திலும் உள்ளது.

9 தங்கம், 2 வெள்ளி, 11 வெண்கலம் என அடங்கலாக மொத்தமாக 22 பதக்கங்களுடன் அவுஸ்ரேலியா நான்காவது இடத்திலும் உள்ளது.

பிரித்தானியா, தென்கொரியா, நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் முறையே ஆறு முதல் பத்து இடங்களை பிடித்துள்ளது.



## செப்ரெம்பரில் இலங்கை வரும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியானது இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை வரும் தென்னாபிரிக்க அணி மூன்று ஒருநாள் மற்றும் மூன்று ரி-20 போட்டிகளில் இலங்கையுடன் பலப்பரீட்சை நடத்தும்.

இந்த தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் உயிர் குமிழி பாதுகாப்பு விதிமுறைகளுடன் நடைபெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் உறுதிப்படுத்தியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் தொடரின் முதல் போட்டி செப்ரெம்பர் 02 ஆம் திகதி ஆரம்பமாகும்.




## இந்திய அணியில் இன்னும் இரு வீரர்களுக்கு கொரோனா

இந்திய கிரிக்கெட் வீரர்களான யுவேந்திர சஹால் மற்றும் கே.கோவிந்தம் ஆகிய இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்விருவருடன் ஏனைய ஆறு வீரர்கள் கொழும்பில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஏனைய வீரர்கள், நாட்டுக்குத் திரும்பியுள்ளனர்.

# இளைஞர்களை சித்திரவதை புரிந்த 4 பெண்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம் - நாவாந்துறைப் பகுதியில் இளைஞர்களைத் தாக்கி, சித்திரவதை புரிந்த குற்றச்சாட்டில் நான்கு பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேர் யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை பகுதியில் புறா வளர்த்த இரண்டு இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியது. இந்நிலையில் தாக்குதலை நடத்திய இளைஞர்கள், தாக்குதலுக்கு உள்ளான இளைஞர்களிடம் சமரசம் பேச முற்பட்ட போது, பெண்கள் குழுவொன்று சமரசம் பேச வந்த இளைஞர்கள் 4 பேரைத் தாக்கி, அவர்களின் முகங்களில் மிளகாய் தூள் தடவி சித்திரவதை புரிந்து அதனைக் காணொளியாகச் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியிருந்தனர்.

பெண்களின் சித்திரவதைக்கு உள்ளான இளைஞர்களில் ஒருவர் கடந்த 27ஆம் திகதி தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்திருந்தார்.

இந்நிலையில், இளைஞர் குழுவைத் தாக்கிய சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பிரதான சந்தேகநபரான பெண் தலைமறைவாக இருந்த நிலையில், அவரைக் கைது செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூன்று பெண்களையும் ஒரு ஆணையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில பெண்கள் தலைமறைவாக உள்ள நிலையில் அவர்களையும் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-3)

# ஹக்கீமுடன் கனடாத் தூதர் கொழும்பில் முக்கிய பேச்சு

## சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஆராய்வு

**கொழும்பில், ஜூலை 16 இலங்கைக்கான கனடாத் தூதுவர் டேவிட் மெகினொன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான முக்கிய கலந்துரையாடல் கொழும்பில் நேற்று நடைபெற்றது.**



மத்திய போசனத்துடன் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கனடா இல்லத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும், முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் பேசப்பட்டன என்று ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

சுமார் இரு மணிநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது எனவும் அவர் மேலும் கூறினார். (இ)



# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் நீதி கோரி நேற்று போராட்டம்

வவுனியா, ஜூலை 31

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நீதி கோரி வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துவதனூடாகவே தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர். (இ)

# பிரித்தானிய வெளியுறவு செயலகத்திடம் ரெலோ முன்வைத்துள்ள கோரிக்கைகள்

லண்டன், ஜூலை 31

பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தியா மற்றும் இந்தியப் பெருங்கடல் உதவி இயக்குநர் லிசா பண்டாரியை சந்தித்த ரெலோ பிரித்தானிய கிளைத் தலைவர் சாம் சம்பந்தன் முக்கியமான கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்துள்ளார்.

இலங்கை விவகாரங்கள் பற்றி கலந்துரையாடப் பட்ட வேளையில் தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னைகளை பிரித்தானிய அரசு உடனடி கவனத்தில் கொள்வதோடு உரிய செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும் என சம்பந்தனால் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

குறிப்பாக தமிழ் மக்கள் நீண்டகாலமாக கோரிவரும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை நமது பாரம்பரிய தாயகமாக அங்கீகரிக்கும் அரசியல் தீர்வை அடைய தமிழ் சமூகத்திற்கு சர்வதேச மத்தியஸ்தத்தின் மூலம் உதவுதல், அரசியல் தீர்வை எட்டும் வரை நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரப் பகிர்வுடன் அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 46/1 இல் பிரேரிக்கப்பட்டதன் பிரகாரம் முழு அளவில் செயல்படுத்துதல், இதன் அடிப்படையில் மாகாண சபை தேர்தல்களை தாமதமின்றி நடத்த இலங்கை அரசை வலியுறுத்துதல், இலங்கை சிறைகளில் கால வரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பு வழங்கி விடுவித்தல், இலங்கை அரசின் இனப்படுகொலை உள்ளிட்ட அட்டூழிய குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மனித உரிமைகள் பேரவையிலும் அதைத் தாண்டியும் செயற்படுத்தல், பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தமிழரின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழ் மக்களின் இனக் குடிப்பரம்பலை சிதைப்பது மூலம் தங்கள் சொந்த நிலத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துதல் என்பன உடனடியாகக் கையாளப்பட வேண்டிய விடயங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டன.

தமிழ் மக்களின் மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் அரசியல் சமத்துவம், கௌரவமான வாழ்வு என்பனவற்றை உறுதி செய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் பிரித்தானியா விரைந்து செயற்படுத்தும் என புதிய உதவி இயக்குனராக லிசா பண்டாரி உறுதியளித்தார்.

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 - 11 - 1941 | 29 - 07 - 2021 |

## குட்டித்தம்பி இரத்தினசிங்கம்

### (கண்ணாடி மாமா)

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை கண்டி)

மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி இரத்தினசிங்கம் கடந்த (29.07.2021) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி புதுநாயகம் தம்பதிகளின் அன்பு நிறை மகனும், சறோஜினிதேவி (கிளி-கொழும்பு) அவர்களின் அன்புக் கணவரும், சுரேஷ்(கனடா), றமேஷ் (ஐக்கிய இராச்சியம்), ஜினேஷ்(கொழும்பு), அசோக் சஞ்ஜேஷ்(ஐக்கிய இராச்சியம்), ஆனந்த அருணேஷ் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரி (கனடா), றோஷினி (ஐக்கிய இராச்சியம்), ஷாரு(கொழும்பு), கோசிக்கா (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குலசிங்கம், பரராஜ சிங்கம் மற்றும் ராணி (கொழும்பு), புனிதவதி (கொழும்பு), புஷ்பா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தாதேவி (கட்டுவன்), தேவி (கனடா), காலஞ்சென்ற குணசீலன், தெய்வேந்திர ராஜா (கொழும்பு), காலஞ்சென்ற விஜயரட்ணம், கருணாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், றக்க்ஷன்(கனடா), மித்ரா (மிற்றி- ஐக்கிய இராச்சியம்), ஆரியன் (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோவிட் கட்டுப்பாடுகள் காரணமாக பிரத்தியேகமான முறையில் இடம்பெறும்.

RIPBOOK ஊடாக இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
றமேஷ் - மகன்
Mobile : +447427611857

தகவல்:
குடும்பத்தினர்.

## தடுப்பூசி...

தவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கேற்ப, அவர்களில் சுமார் 95 சதவீதமானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது. தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டிருந்தபோதும், அவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்து விசாரணை செய்வதும், தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இது பற்றி பிரதேச செயலக மட்டத்தில் துரித கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டு, சில தினங்களுக்குள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்த அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கோவிட் ஒழிப்பு விசேட குழுவுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. நோய் பரவுவதை தடுக்கும் வகையில் செயற்படுவதும் தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதும் மக்களின் கடமையாகுமென, ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு வருகை தரும் மக்கள், தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பதனை உறுதிப்படுத்தும் அட்டையைத் தம்வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது குறித்தும் கோவிட் குழு கவனம் செலுத்தியுள்ளது.

அமைச்சர்களான பவித்ரா வன்னியாரச்சி, காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, கெஹெலிய ரம்புக்வெல்ல, மஹிந்தானந்த அழுத்கமகே, ரோஹித்த அபேகுணவர்தன, ரமேஷ் பத்திரன, நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே, சிசிர ஜயக்கொடி. சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினர் மதுர வித்தானகே, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன ஆகியோரும் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளும், இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## அரசாங்க...

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கோவிட்-19 நோயாளர்கள் மற்றும் உயிரிழந்தவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கேற்ப, அவர்களில் சுமார் 95 சதவீதமானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டிருந்தபோதும், அவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் குறித்து விசாரணை செய்வதும், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இது பற்றி பிரதேச செயலக மட்டத்தில் துரித கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டு, சில தினங்களுக்குள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்த அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை அரசு நிறைவேற்றியுள்ளது. நோய் பரவுவதை தடுக்கும் வகையில் செயற்படுவதும் தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதும் மக்களின் கடமையாகுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு வருகை தரும் மக்கள், தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் அட்டையைத் தம்வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது குறித்தும் கோவிட் குழு கவனம் செலுத்தியுள்ளது.

அமைச்சர்களான பவித்ரா வன்னியாரச்சி, காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, கெஹலிய ரம்புக்வெல, மஹிந்தானந்த அழுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, ரமேஷ் பத்திரண, நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே, சிசிர ஜயக்கொடி. சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன ஆகியோரும் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளும், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

## சகல அரச...

அழைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.”

-இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கோவிட்-19 தடுப்பூசி போடவேண்டிய மக்கள் தொகையில் பெரும் சதவீதத்துக்கு இப்போது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான அரச ஊழியர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எனவே பொது சேவையின் தொடர்ச்சியாக இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கோவிட்-19 சுகாதார பராமரிப்பு வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு 2021 ஒகஸ்ட் 2ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழக்கம் போல அனைத்து அரச ஊழியர்களையும் பணிக்கு அழைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரத்னசிறிக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

கோவிட்-19 நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களை கடமைக்கு அழைப்பதற்கும் வீட்டிலிருந்து கடமையாற்றுவதற்கும் அனுமதியளித்து வழங்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளையும்

இரத்து செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

## 2,455 தொற்றாளர்...

கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக 27 ஆயிரத்து 121 பேர் சிகிச்சை நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3 லட்சத்து 6 ஆயிரத்து 662ஆக உயர்வடைந்துள்ளது.

## காங்கேசனில்...

யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, தொற்றுக்குள்ளான அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.



# தோண்டி எடுக்கப்பட்டது ஹிசாலினியின் உடல்

## பிரேத பரிசோதனைக்காக கண்டிக்கு அனுப்பிவைப்பு

கண்டி, ஜூலை 31

சிறுமி ஹிசாலினியின் உடல் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் தோண்டி எடுக்கப்பட்டு கண்டி பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. விசேட வைத்திய குழுவினர் முன்னிலையில் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியூதீன் வீட்டில் வீட்டு பணிப்பெண்ணாக இருந்து தீ காயங்களுக்கு உள்ளான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்த டயகம மேற்கு பிரிவு தோட்ட சிறுமி ஜூட் குமார் ஹிசாலினியின் உடலம் தோன்றி எடுக்கப்பட்டு உடலம் மேலதிக உடல் கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்க நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது.

சிறுமி ஹிசாலினியின் பிரேத பரிசோதனை கொழும்பில் இடம்பெற்றதாகவும், முஸ்லிம் வைத்தியர் ஒருவர் சடலத்தை பரிசோதனைக்கு உட்படுத்தி சடலம் பெற்றோர்களுக்கு கையளிக்கப்பட்டதாகவும் தனது மகளின் மரணத்தில் சந்தேகம் உள்ளதால் மீண்டும் சட்ட வைத்தியர் ஒருவர் ஊடாக உடல் கூற்று பரிசோதனை செய்ய வேண்டும் என சிறுமியின் பெற்றோர் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறையிட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி லுசாக்கா குமாரி ஜெயரத்ன முன்னிலையில் தெரிவித்தனர்

இதனையடுத்து சிறுமியின் சடலம் புதைக்கப்பட்ட டயகம மேற்கு தோட்ட புதைக்குழிக்கு கடந்த நான்கு நாளாக பலத்த பொலிஸ் பாதுகாப்பு இடப்பட்டு மீண்டும் சிறுமியின் சடலத்தை தோண்டி பரிசோதனைக்கு அனுப்ப கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள வைத்தியர் ஒருவர் உள்ளடங்கிய அதிகாரிகள் மற்றும் கண்டியிலிருந்து வருகை தந்துள்ள இரண்டு வைத்திய அதிகாரிகள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் மற்றும் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட குழுவினர் நுவரெலியா, டயகம பொலிஸார் உள்ளிட்டோர் முன்னிலையில் டயகம தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த சிறுமியின் உடல் தோண்டி எடுத்து பலத்த பொலிஸ் பாதுகாப்போடு கண்டி பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

## யாழ்.பல்கலை...

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பீடாதிபதிக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த 88 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றில் ஒருவருக்கு மட்டும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணின் கணவர் ஏற்கனவே தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் அவரின் குடும்பம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

## இலங்கைக்கு...

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு பிரிட்டன் உட்பட ஐந்து நாடுகள் தயாராகி வருகின்றன என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டன், மசிடோனியா, கனடா, ஜேர்மனி மற்றும் மொண்டினீக்ரோ ஆகியவை இணைந்து கூட்டாக இந்த தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 48 ஆவது அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் 13ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 8 ஆம் திகதி வரை ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. இதன்போதே இந்தப் புதிய தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு ஐந்து நாடுகள் திட்டமிட்டுள்ளன என தெரியவருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சீனா சமர்ப்பித்த பிரிட்டிஷ் எதிர்ப்பு தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்தமையே இந்தப் புதிய தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

## வேலணையில்...

கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒரு வயதுடைய பெண் குழந்தைகள் இருவர், ஐந்து வயதுடைய பெண் சிறுமி உட்பட்டவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 86 பேருக்கு நேற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுமியின் மரணம்...

அத்தோடு ரிஷாத் பதியுதீன் போன்றவர்களுக்காக பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

இதேவேளை, ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் மரணத்தை மறைக்க சதித்திட்டம் இடம்பெறுவதாக சிங்களே அமைப்பின் மெடில்லே பஞ்சாலோக்க தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறுமியின் மரணம் குறித்த முதல் பிரேத பரிசோதனையில் வசீம் தாஜூதீனின் பிரேத பரிசோதனைக்கு விசுவாசமாக இருந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை உடன் விடுதலை செய்யவும்

## 11 சர்வதேச அமைப்புகள் கூட்டாக வலியுறுத்தி அறிக்கை



கொழும்பு, ஜுலை 31

**சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் விடுதலையை வலியுறுத்தி 11 சர்வதேச அமைப்புகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.**

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ் புல்லா 15 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.**

அம்னெஸ்டி இன்டர்நெஷனல், ஹியூமன் ரைட்ஸ் வாட்ச், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம், ஆர்டிகல் 19 உட்பட 11 சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளன.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனக் கூறி, இந்த அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இலங்கையில் சிறுபான்மையினர் உரிமைகள் மீறப்படுவது கவலை தருகின்றது எனவும் ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் உட்பட 11 அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக எவ்வித சாட்சியங்களும் இல்லாத நிலையில், அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் குறித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ)

# ஹிஷாலினிக்கு நீதி கோரி லிந்துலையில் ஆர்ப்பாட்டம்

லிந்துலை, ஜுலை 31

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கோரியும், மலையகத்தில் இருந்து சிறுவர்களை வேலைக்கு அழைத்துச் செல்லும் தரகர்களைக் கைதுசெய்ய வேண்டும் எனக் கோரியும் லிந்துலை சென்றெகுலர்ஸ் தோட்ட மக்கள் நேற்றுக் காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக் காரர்கள், "கண்கட்டிய வித் தையா இன்று பெண்களின் நிலை", "ஹிஷாலினிக்கு ஏற் பட்ட சம்பவம் இனிமேல் யாருக்கும் இடம்பெறக் கூடாது" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும், நீதி வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பிய வாறும் எதிர்ப்பு ஆர்பாட்டத்தை முன்னெடுத்தனர். (இ)

# ஏழு மாதங்களில் 900 கோடி ரூபா மதிப்புள்ள போதைப்பொருட்கள் மீட்பு 15,000 பேர் கைது

கொழும்பு, ஜுலை 31

இலங்கையில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 900 கோடி ரூபா மதிப்புள்ள போதைப்பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களில், 473 கிலோ ஹெரோயின், 300 கிலோ ஐஸ் போதைப்பொருள் மற்றும் 3 ஆயிரத்து 485 கிலோ கஞ்சா ஆகியவை அடங்குகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பெரும்பாலான போதைப்பொருட்கள் இலங்கையின் தென் கடலுக்கு அப்பால் உள்ள சர்வதேச கடலின் ஊடாக படகு மூலம் கொண்டு வரப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்டவர்களில் போதைப் பொருள் வலையமைப்புடன் தொடர்புடைய 40 முக்கிய சந்தேகநபர்களும், ஹெரோயின் தொடர்பாக 12 ஆயிரத்து 890 சந்தேகநபர்களும், ஐஸ் போதைப் பொருள் தொடர்பாக 1457 பேரும், கஞ்சா தொடர்பாக 8 ஆயிரத்து 509 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



இவர்களிடையே சர்வதேச, உள்ளூர் விநியோகஸ்தர்கள் மற்றும் படகு மூலம் போதைப்பொருளை இலங்கைக்கு கொண்டு வர உதவியவர்களும் உள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, பொலிஸ், விசேட அதிரடிப் படை, கடற்படை, சுங்கப்பிரிவு, கடலோர காவல்படை மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன" - என்றார். (இ)

## 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்" கப்பல் விபத்து:

# 473 கடல் உயிரினங்கள் இறந்து கரை ஒதுங்கல்

கொழும்பு, ஜுலை 31

இலங்கை கடற்பரப்பில் "எக்ஸ் - பிரஸ் பேர்ல்" கப்பல் தீ விபத்துக்குள்ளானதை யடுத்து இதுவரையில் 473 கடல் உயிரினங்களின் உடல்கள் கரை ஒதுங்கியுள்ளன என்று சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

கப்பல் தீ விபத்து தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் லோசன அபேவிக்ரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவு சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன் இதனை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வனவிலங்கு பாதுகாப்புத் துறையால் இந்தத் தரவு வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், இவ்வாறு உயிரிழந்த கடல் உயிரினங்களிடையே 417 ஆமைகளும், 48 டொல்பின்களும், 8 திமிங்கிலங்களும் அடங்குகின்றன என வும் தகவல் வெளியிட்டுள்ளார்.

அத்தோடு உயிரினங்களின் உடல்கள் மேலதிக ஆய்வுக்காக அரச பகுப்பாய்வாளர் மற்றும் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என வும் அவர் கூறியுள்ளார்.

தீ விபத்துக்குள்ளான "எக்ஸ் - பிரஸ் பேர்ல்" கப்பலுக்கு அருகில் இருந்து பெறப்பட்ட நீர் மாதிரிகள் அரச பகுப்பாய்வாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன எனவும், பகுப்பாய்வில் நீர் மாதிரிகளில் பெட்ரோலிய கூறுகள் இருப்பது தெரியவந்துள்ளது எனவும் அவர் மேலும் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். (இ)

# வீதியில் சென்ற இளைஞரை பொலிஸார் கடத்தி தாக்குதல்

## யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜுலை 31

வீதியால் சென்ற தன்னை கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் வாகனத்தில் கடத்திச் சென்று, கைத்துப் பாக்கியால் தாக்கி, வீதியில் வீசிவிட்டுச் சென்றனர் என்று இளைஞர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

தான் வீதியால் சென்று கொண்டிருந்த போது மது போதையில் ஹயஸ் ரக வாகனத்தில் வந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கடத்திச் சென்று வாகனத்தினுள் வைத்து கைத்துப்பாக்கி யால் தாக்கி சில கிலோ மீற்றர் தூரம் கொண்டு சென்று வீதியில் வீசி விட்டுச் சென்றனர் என்று பாதிக்கப்பட்ட இளைஞர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஒரு வார கால பகுதிக்குள் கோப்பாய் பொலிஸாரால் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நான்கு முறைப்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் விளக்கங்கள் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும், கோப்பாய் பொலிஸாரின் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ)




# உறவுகளை மீட்டுத்தரக் கோரி முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, ஜுலை 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்னெடுத்தனர்.

கடந்த 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி அவர்கள் ஆரம்பித்த தொடர் போராட்டம் நேற்று 1,604 நாளாகத் தொடர்ந்தது. இந்நிலையில், அவர்கள் போராட்டக் கொட்டகைக்கு முன்பாகக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் தமக்கு எந்தவித நீதியும் கிடைக்கவில்லை என்றும், உடனடியாகத் தமக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் உறவினர்கள் வலியுறுத்தினர். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-பண்டிதர் திருநாவுக்கரசு
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- ஆழ்வார்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை –TNA இன் ஆளுகைகு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள்



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்றியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு